ஆடவர், வனி... விரும்பும் அழகு வண்ணப் புடைவைகளுக்கு
சிறந்த இடம்:
ச. லிங்கநாதன் வண்ணச்சோலை
13, 14, பெரியகடை, யாழ்ப்பாணம்.
(சி-513)

பக்கங்கள் ஆறு
Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

முகூர்த்தப் பட்டுப் புடைவைகளை தெரிவு செய்திட
இன்றே நாடுங்கள்
ச. லிங்கநாதன் வண்ணச்சோலை
13, 14, பெரியகடை, யாழ்ப்பாணம்.
[சி-513]

சுடர் 10 திருவள்ளுவர் ஆண்டு 2026 சித்திரை 06 புதன்கிழமை (19 04 1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 142

# சமாதானப் பேச்சு, மோதல் தவிர்ப்பு ஏற்பாடு இரண்டில் இருந்தும் புலிகள் விலகினர்!

14 படகுகளில் சென்ற

## 58 தமிழக மீனவர்கள் காணாமற்போயினர்?

சென்னை, ஏப். 19

இராமேஸ்வரத்தில் இருந்து 14 படகுகளில் மீன் பிடிக்கச் சென்ற 58 மீனவர்கள் திரும்பி வரவில்லை என்றும்—

இவர்களை மீட்பதற்கு மத்திய அரசு தலையிட்டு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றும் தெரிவித்து இராமேஸ்வரத்தைச் சேர்ந்த மீனவர் சங்கங்கள் பிரதமர் திரு பி. வி. நரசிம்மராவுக்கு தந்தி அனுப்பி இருக்கின்றன.

இந்திய வெளியுறவு அமைச்சு இலங்கை அரசுடன் பேச்சு நடத்தி இத்தகைய பிரச்சினைகள் மீண்டும் ஏற்படாமல் தடுக்கவேண்டும் என்றும் அந்தச் சங்கங்கள் கேட்டுக் கொண்டிருப்பதாக இந்திய வானொலி நேற்று அறிவித்தது. [உ-4]

## 13 இலங்கை மீனவருக்கு மாலைதீவில் மன்னிப்பு

கொழும்பு, ஏப். 19

மாலைதீவு கடற்பிராந்தியத்தில் மீன் பிடித்த குற்றத்துக்காக 13 இலங்கை மீனவர்களுக்கு விதிக்கப்பட்ட தண்டனையை மாலைதீவு ஜனாதிபதி அப்துல் கையூம் ரத்துச் செய்துள்ளார்.

இலங்கை அரசு விடுத்த கோரிக்கையை அடுத்து இந்த நடவடிக்கையை அவர் எடுத்ததாகவும்—

இந்த மீனவர்கள் விரைவில் விடுதலையாவர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

கடந்த மூன்று வருடங்களாக மாலைதீவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள மீனவர்களை விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்கும்படி வலியுறுத்தியும்—

மாலைதீவு அரசால் தடுத்து வைக்கப்பட்டுள்ள சுமார் ஒன்பது கோடி ரூபா பெறுமதியான 33 வள்ளங்களை விடு

(6 ஆம் பக்கம் பார்க்க)

பதுளையிலிருந்து கொழும்பு ஊடாக

## யாழ்ப்பாணம் நோக்கி சமாதானப் பாதயாத்திரை!

கொழும்பு, ஏப். 19

பதுளையில் இருந்து கொழும்பு ஊடாக யாழ்ப்பாணத்துக்கு சமாதான பாதயாத்திரை ஒன்றை அடுத்த மாதம் நடத்த தேசிய இளைஞர் மன்றம் ஏற்பாடு செய்து வருகின்றது.

சமாதான முயற்சியில் இளைஞர்களையும், யுவதிகளையும் ஈடுபடுத்தும் நோக்கில் இந்த முயற்சியில் மன்றம் ஈடுபட்டுள்ளதாகவும் —

பாதயாத்திரையாக யாழ்ப்பாணம் செல்வதற்கு விடுதலைப் புலிகளிடம் இந்த மன்றம் அனுமதி கோரியுள்ளதாகவும்—

பி. பி. ஸி. கொழும்பு செய்தியாளர் எல்மோ பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். (உ-3-6)

ஹொங்கொங்கில்

## இலங்கை - இந்திய அறிஞர் புலிகளைச் சந்தித்துப் பேச்சு

கொழும்பு, ஏப். 19

இந்திய முன்னாள் நீதியரசர் கிருஷ்ணஐயர் தலைமையில் புத்திஜீவிகளையும் இலங்கை — இந்திய நாடுகளைச் சேர்ந்த சமய அறிஞர்களையும் கொண்ட குழு ஒன்று அண்மையில் ஹொங்கொங் சென்றிருந்தது.

அங்கு இந்தக் குழுவினர் விடுதலைப் புலிகள் பிரமுகர்களைச் சந்தித்ததாக கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கை இனப்பிரச்சினை தொடர்பாக நடத்துவரும் சமாதான முயற்சிகள் பற்றி இரு தரப்பினரும் கருத்துப் பரிமாறிக் கொண்டனர் என்றும்—

தமிழ் மக்கள் எதிர்நோக்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## 40 தொன் போதைவஸ்து கடும் சண்டையின் பின் மீட்பு

### பாகிஸ்தானில் சம்பவம்

இஸ்லாமாபாத், ஏப். 19

பாகிஸ்தானில் கடந்த சனியன்று கடத்தல்காரர்களுடன் நடந்த பெரும் மோதலின் பின்னர் 40 தொன் நிறையுடைய ஹஸ்கி மற்றும் அபின் போதைவஸ்துகளை பாதுகாப்புப் படையினர் கைப்பற்றியதாக பாகிஸ்தான் அதிகாரிகள் தெரிவித்தனர்.

பாகிஸ்தான் முன்னணிப் படைகள், கரையோரக் காவல் படையுடன் இணைந்து நள்ளிரவில் நடத்திய திடீர் தேடுதல் நடவடிக்கையின் போது கடத்தல்காரர்கள் றொக்கட் லோஞ்சர்கள், கனரக இயந்திரத் துப்பாக்கிகள் ஆகியவை கொண்டு எதிர்த்தாக்குதல் நடத்தியதாகவும் —

இரண்டு ஹெலிக்கொப்டர்கள், ஒரு போர் விமானம் ஆகியவை சகிதம் சுமார் 150 படையினர் பல மணி நேரம் நடத்திய கடும் சண்டையின் பின்னர், போதைவஸ்து கைப்பற்றப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ)

## அரசுக்கு நேற்றிரவு அறிவிக்கப்பட்டது



யாழ்ப்பாணம். ஏப்ரல் 19

ஸ்ரீலங்கா அரசுடன் கடந்த ஆறு மாதகாலமாக நடத்தி வந்த சமாதானப் பேச்சுக்களில் இருந்தும், கடந்த மூன்று மாத காலமாக நடைமுறையிலிருந்து வந்த மோதல் தவிர்ப்பு உடன்பாட்டிலிருந்தும் தமிழீழ விடுதலைப் புலிகள் விலகிக் கொண்டனர்.

இது தொடர்பாக தமது முடிவைத் தெரிவிக்கும் கடிதத்தை தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் நேற்றிரவு ஸ்ரீலங்கா ஜனாதிபதி திருமதி சந்திரிகா குமாரதுங்காவுக்கு அனுப்பி வைத்தார்.

*தலைவர் பிரபாகரன் நேற்றிரவு அனுப்பிய கடிதத்தின் விவரம் வருமாறு;—*

தலைமைச் செயலகம்,
தமிழீழ விடுதலைப் புலிகள்,
யாழ்ப்பாணம்,
18, ஏப்ரல் 1995.

கனம் சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கா,
சிறிலங்கா ஜனாதிபதி,
ஜனாதிபதியின் செயலகம்,
கொழும்பு.

உங்களது, 12 ஏப்ரல் 1995 திகதியிடப்பட்ட கடிதம் கிடைத்தது. நன்றி.

உங்களது கடிதத்தில் தெரிவிக்கப்பட்ட கருத்துகளை மிகவும் கவனமாகவும் ஆழமாகவும் பரிசீலனை செய்தோம். நாம் எழுப்பிய முக்கிய பிரச்சினைகள் சம்பந்தமாக நீங்கள் தெரிவித்த பதிலுரைகள் எமது எதிர்பார்ப்புகளை நிறைவுசெய்யத் தவறியமையால் நாம் மிகவும் அதிருப்தியடைந்துள்ளோம்.

கடந்த ஆறு மாதங்களுக்கு மேலாக நிகழ்ந்த கருத்துப்பரிமாற்றம் மூலம், உங்களுக்கு உண்மைநிலையை எடுத்துரைத்து, அதன் பலாபலன் வாயிலாக பொருளாதார தடைநீக்கம் என்ற ஆக்கபூர்வமான முடிவை மட்டும் உங்களிடமிருந்து நாம் பெறமுடிந்தது. இந்த முடிவானது, 24 மார்ச் 1995 திகதியிடப்பட்ட உங்களது கடிதத்தில் தெரிவிக்கப்பட்டபோதும் அதை நடைமுறைப்படுத்தும் விடயத்தில் திட்டமிடப்பட்ட முறையில் காலம் தாழ்த்தப்பட்டது. நாம் விதித்த காலக்கெடுவை முறியடிக்கும் நோக்கிலேயே இந்தத் திட்டமிட்ட இழுத்தடிப்பு நேர்ந்திருக்கிறது.

நாம் முன்வைத்த மற்றைய பிரச்சினைகள் சம்பந்தப்பட்டமட்டில் உங்களது பதிலுரைகள், மழுப்பல்களாகவும், நழுவல்களாகவும், எதிர்காலப் பேச்சுக்களில் முடிவெடுக்க வேண்டியவையாகவும் அமையப்பெற்றுள்ளன.

மீன்பிடி சம்பந்தப்பட்ட மட்டில் ஒரு சில தளர்வுகள் மட்டும் செய்யப்பட்டிருக்கிறது. ஆயினும், பெரும்பகுதிக் கடற்பரப்பில் மீன்பிடிக்கு தடைகள் தொடர்ந்து இருக்கவே செய்கின்றன. 24 மார்ச், 1995, திகதியிடப்பட்ட உங்களது கடிதத்தில் மீன்பிடி மீதான சகல தடைகளும் நீக்கப்படுமென நீங்கள் உறுதியளித்திருந்தும் தடைகள் முற்றாக நீங்கவில்லை.

பூநகரி இராணுவ முகாமை அகற்றி யாழ்ப்பாணத்திற்கு பாதையை திறந்துவிடுதல், கிழக்கு மாகாணத்தில் எமது ஆயுதப் போராளிகளின் நடமாட்டம் ஆகிய அதிமுக்கிய பிரச்சினைகள் சம்பந்தப்பட்ட மட்டில் உங்களது முடிவுகள் எமக்கு ஏற்புடையதாக இல்லை. எதிர்காலப் பேச்சுக்களின்போது இவை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று சொல்லப்படுவதை நாம் ஏற்கமுடியாது.

இந்த முக்கிய பிரச்சினைகளை ஒரம் கட்டிவிட முனையும் எத்தனிப்பு ஒன்றைத் தெளிவாக காட்டுகிறது. அதாவது, உண்மையான சமாதானத்தையும் இயல்புநிலையையும் தோற்றுவிக்கும் நோக்கமெதுவும் உங்களது அரசிடம் இருப்பதாகத் தெரியவில்லை. பதிலாக, இராணுவத்தின் நலனைப் பேணுவதிலேயே நீங்கள் அதீத அக்கறை காட்டுகிறீர்கள், அதுமட்டுமன்றி, மோதல் தவிர்ப்பு ஒப்பந்த சூழ்நிலையை உங்களுக்கு சாதகமாகப் பயன்படுத்தி, ஆயுதப்படையினரின் பலத்தைக் கட்டியெழுப்புவதில்தான் அரசு கவனம் செலுத்துகிறது என்பதை நாம் ஐயுறவின்றி காணக்கூடியதாக இருக்கிறது. இரு தரப்பினரும் இராணுவ சமபலத்தைப் பேணவேண்டும் என்ற மோதல் தவிர்ப்பு ஒப்பந்த விதியை இந்நடவடிக்கை மீறுவதாக அமைகிறது என்பதையும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

19 ஏப்ரல் 1995 என்று நாம் விதித்த காலக்கெடுவினுள், அந்தக்கால அவகாசத்தினுள், மேற்குறிப்பிட்ட எமது கோரிக்கைகள் எதையும் நீங்கள் நிறைவு செய்யத் தவறியமையால், நாம் ஏற்கனவே தெரிவித்ததுபோல இத்திகதியிலிருந்து சமாதானப் பேச்சுக்களிலிருந்தும் மோதல் தவிர்ப்பு உடன்பாட்டிலிருந்தும் விலகிக்கொள்வதென்ற வேதனைக்குரிய முடிவை எடுத்துள்ளோம். இந்த முடிவை எடுப்பதைத் தவிர எமக்கு மாற்றுவழி எதையும் நீங்கள் விட்டுவைக்கவில்லை.

இந்த துரதிர்ஷ்டமான சூழ்நிலை குறித்து நாம் மிகவும் வருந்துகிறோம்.

உங்கள் நேர்மையுள்ள
(வே. பிரபாகரன்)
தலைவர்,
தமிழீழ விடுதலைப் புலிகள்.

## செஞ்சிலுவை ஊடாக கடிதம் அனுப்பப்பட்டது

சமாதானப் பேச்சு மற்றும் மோதல் தவிர்ப்பு ஏற்பாடு ஆகியவற்றிலிருந்து விலகுவது தொடர்பான தலைவர் திரு. வே. பிரபாகரனின் கடிதம் நேற்றிரவு 7 மணியளவில் செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக் குழு மூலம் ஜனாதிபதி சந்திரிகாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

ஜனாதிபதி சந்திரிகா கடந்த 12 ஆம் திகதி தலைவர் பிரபாகரனுக்கு அனுப்பிய கடிதத்துக்கு நேற்று மாலை வரை பதில் அனுப்பப்படாததால் சமாதான முயற்சிகளின் எதிர்காலம் சந்தேகத்துக்கு உள்ளாகியிருப்பதாக பி.பி.ஸி செய்தியாளர் எல்மோ பெர்னாண்டோ நேற்றிரவு குறிப்பிட்டிருந்தார்.

இதேசமயம் —

பொருளாதாரத்தடை, மீன் பிடித்தடை ஆகியவை தளர்த்தப்பட்டதாக கடந்த

[2 ஆம் பக்கம் பார்க்க]

## அன்னை பூபதி நினைவு நிகழ்வுகள் இன்று

யாழ்ப்பாணம், ஏப். 19

தியாகச் சுடர் அன்னை பூபதியின் ஏழாம் ஆண்டு நினைவுநாள் இன்று தமிழீழம் எங்கும் எழுச்சி பூர்வமாக அனுஷ்டிக்கப்படும்.

தென்தமிழீழம், வன்னிப் பிரதேசம் உட்பட எல்லா இடங்களிலும் இன்று உண்ணாவிரத நிகழ்வுகளும், நினைவுக் கூட்டங்களும் நடைபெற உள்ளன.

யாழ் குடாநாட்டில் இன்றைய நினைவு நிகழ்ச்சிகள் கோட்டரீதியாக நடைபெற உள்ளன.

காலை ஏழு மணிதொடக்கம் பி.ப. 5 மணிவரை பொதுமக்கள் உண்ணாவிரதம் அனுஷ்டிப்பர்.

இரவு 8 மணி தொடக்கம்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## அன்னை பூபதி தேர்வின் பரிசளிப்பு உரும்பராயில்!

யாழ்ப்பாணம், ஏப்.19

விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு, அன்னை பூபதி நினைவாக நடத்திய பொது அறிவுத் தேர்வில் சிறப்புத் தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு பரிசு வழங்கும் வைபவம் இன்று காலை 9 மணிக்கு உரும்பிராயில் உள்ள அன்னை பூபதி கலையரங்கில் இடம்பெறும்.

விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு மகளிர் பிரிவின் பொறுப்பாளர் செல்வி வாசுகி பரிசளிப்பு விழாவுக்குத் தலைமை வகிப்பார்.

தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு. ப. தமிழ்ச்செல்வன், யாழ்.பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் அ. சண்முகதாஸ் யாழ். கல்வி வலயம் ஒன்றின் பிரதிக் கல்விப்பணிப்பாளர் நா. சுந்தரலிங்கம், யாழ். கல்வி வலயம் இரண்டின் பணிப்பாளர் கே. கந்தசாமி, பொதுத் தேர்வு ஆய்வுக் கிளைப் பணிப்பாளர் ஆர். எஸ். நடராசா, தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவைத் தலைவர் அருட்திரு. பிரான்சிஸ் யோசப் அடிகளார், காந்தரூபன் அறிவுச் சோலைப் பொறுப்பாளர் ரமேஸ் அப்பா ஆகியோர் பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினர்களாகக் கலந்து கொள்வர். [அ]

## அன்னை நினைவு நிகழ்வில் படையினர் அடாவடித்தனம்

யாழ்ப்பாணம், ஏப் 19

அம்பாறை மாவட்டம் அக்கரைப்பற்றில் இராமகிருஷ்ண கல்லூரியில் நேற்று பிற்பகல் 1 30 மணியளவில் அன்னை பூபதியின் நினைவு நிகழ்வுகளில் தமிழ் மக்கள் ஈடுபட்டிருந்த போது அங்கு வந்த ஸ்ரீலங்கா பொலீஸ் அதிரடிப் படையினர் அடாவடித்தனத்தில் ஈடுபட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பொத்துவில், கோமாரி ஆகிய இடங்களில் அன்னை பூபதி நினைவாக கட்டப்பட்டிருந்த சமாதான பதாகைகளை அதிரடிப்படையினர் கிழித்தெறிந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. [உ-3]

## ஸ்ரீ. ல. சு. க. பிரமுகர் குத்திக் குதறிக் கொலை

கொழும்பு, ஏப் 19

இப்பாகமுவப் பிரதேச சபையின் எதிர்கட்சித் தலைவரும், ஹிரியாலைத் தொகுதி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிப் பிரதம அமைப்பாளருமான மாலேகமுவ என்பவர் குண்டர்களினால் குத்தி குதறப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளார் என்று தெரியவந்துள்ளது.

ஹிட்பிரியாகாவில் உள்ள பொது மயானம் ஒன்றில் அவரது ஜீப்பில் இருந்து அவரது சடலம் கடந்த 14 ஆம் திகதி கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும் —

பொலீத்தீன் பையினால் சுற்றப்பட்டிருந்த நிலையில் அவரது சடலத்தை பொலிஸார் கைப்பற்றியுள்ளதாகவும் — தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக விசாரணை மேற்கொண்ட பொலிஸார் ஒருவரை சந்தேகத்தில் கைது செய்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னைபூபதி நினைவு நாளில்

# சாவகச்சேரியில் இன்று இரத்ததான நிகழ்வு

தென்மராட்சி, ஏப். 19

அன்னை பூபதியின் ஏழாம் ஆண்டு நினைவை யொட்டி தென்மராட்சிப் பகுதி மக்களால் இரத்ததானம் வழங்கும் வைபவம் இன்று காலை சாவகச்சேரி மாவட்ட வைத்திய சாலையில் நடைபெறும்.

யாழ். மாவட்ட நோயாளர் நலன்புரி சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த நிகழ்வுடன் நோயாளர் நலன் புரிசங்க செயலகத்திற்கான அடிக்கல் நாட்டுதலும் வைத்திய சாலைக்கு அன்பளிப்புப் பொருள்கள் வழங்குதலும், சங்கத்தின் முச்சக்கர வண்டிச் சேவையை ஆரம்பித்து வைக்கும் வைபவமும் இடம் பெறும் [ஒ-5-117]


## யாழ். மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கம்

## ஆண்டுப் பொதுக் கூட்டம்

**23 - 04 - 95** ஞாயிற்றுக்கிழமை
முற்பகல் 10, 00 மணிக்கு
கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்

### நிகழ்ச்சி நிரல்

1. இறை வணக்கம்
2. சென்ற ஆண்டுக் கூட்ட அறிக்கை
3. ஆண்டறிக்கை
4. நிதியறிக்கை
5. தலைமையுரை
6. காப்பாளர் உரை
7. பிரேரணைகள்
8. உத்தியோகத்தர் தெரிவு
9. ஏனைய விடயங்கள்
10. கல்லூரிக் கீதம்

அங்கத்தவர்களுக்குத் தனிப்பட்ட கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. கடிதம் கிடைக்கப்பெறாவிடின் இவ்வறிவித்தலையும், அழைப்பையும் தயவு செய்து ஏற்று கூட்டத்திற்கு வருகை தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

கா. மாணிக்கவாசகர், உப- தலைவர்
என். இராஜதேவன், செயலாளர்
(36308)



## அறிவித்தல்

தியாகச் சுடர் அன்னை பூபதியின் நினைவாக கோட்ட மட்டங்களில் இன்று நடைபெறும் நிகழ்வுகளில் எமது அங்கத்துவ நிறுவனங்கள் சார்பில் பூரண பங்கேற்று ஒத்துழைக்குமாறும். இளை நிலையங்களில் கொள்வனவை மட்டும் மேற்கொள்ளுமாறும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

பொது முகாமையாளர்,
வடமாகாண
ப. நெ. வ. அ. கூ. ச, சமாசம்.
[சி-1041]



## கண்ணீர் அஞ்சலி

நவாலி தெற்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், யாழ். தேசிய கூட்டுறவுச் சபையின் முன்னாள் பணியாளரும், கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரியின் விரிவுரையாளராகவும் பணியாற்றிய [தற்போது உரிமையாளர் சமுத்திரா ரேடர்ஸ்].

### முருகேசு சுகந்தசீலன்

அவர்களின் மரணச் செய்தி அறிந்து அதிர்ச்சி அடைந்துள்ளோம். அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலியை செலுத்துவதுடன் அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொள்கிறோம்.

பணியாளர்கள்
யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபை
(சி- 1042)


## புலிகளின் குரல் வானொலியில்

**19 - 04 - 1995**
**புதன் இரவு**

- ★ 8-02 — தியாக தீபம் அன்னைபூபதியின் 7ஆம் ஆண்டு நினைவாக சிறப்பு நிகழ்ச்சி — நல்லூர் ஈழதாசன் வில்லிசைக் கலைஞர்கள் வழங்கும் ''தியாகத் தாய்'' — வில்லிசை.
- ★ 8-30 — செய்திகள்
- ★ 8-40 — நாடகம் — கருணைரவி எழுதிய ''முன்னோடி''

**20 — 04 — 1995**
**வியாழன் காலை**

- ★ 7-02 — மாவீரவணக்கம்
- ★ 7-15 — விடுதலை கீதங்கள்
- ★ 7-30 — செய்திகள்
- ★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
- ★ 7-40 — விடுதலை கீதங்கள் நிகழ்ச்சியின் தொடர்ச்சி

## தமிழீழ வானொலி

**ஒலிபரப்பு**
**புதன் மாலை**

- ★ 5-01 — சிந்தனைச் சிதறல்
- ★ 5-02 — எழுச்சிகீதம்
- ★ 5-10 புதியவை
- ★ 5-15 — படப்பாடல்கள்
- ★ 5-30 — அறிவூற்று
- ★ 6-00 — சிந்தனைக்குச் சில வினாடிகள்
- ★ 6-08 — உங்கள் தெரிவு
- ★ 6-15 — விளையாட்டுச் செய்திகள்
- ★ 6-20 — உங்கள் தெரிவு நிகழ்ச்சியின் தொடர்ச்சி

## பேராதனை பல்கலைக்கழக விரிவுரைகள்

கொழும்பு, ஏப் 19

பேராதனை பல்கலைக்கழக விரிவுரைகள் மீண்டும் இம்மாதம் 24 ஆம் திகதி ஆரம்பமாகும்.

தற்போது இப் பல்கலைக்கழகம் விடுமுறைக்காக மூடப்பட்டுள்ளது. [இ 5]

## பயிற்சி முகாம்

யாழ்ப்பாணம், ஏப் 19

பகுதி நேர உதைபந்தாட்ட பயிற்சியாளர்களுக்காக யாழ். மாவட்ட உதைபந்தாட்டப் பயிற்சியாளர் சங்கம் நடத்தும் பயிற்சி முகாம் எதிர்வரும் வெள்ளி சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 5. 30 மணி வரை நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. [உ]


கணக்கியல்
## பிரத்தியேக வகுப்பு

ஆரம்பம்
**07 05 95**
ஞாயிறு மாலை 5-00 மணி
சு. ஸ்ரீ B. Com [Hons]
393/47 கோவில் வீதி
நல்லூர்
யாழ்ப்பாணம்

குறிப்பு
குறிக்கப்பட்ட அளவு மாணவர்கள் மட்டுமே சேர்த்துக் கொள்ளப்பட இருப்பதனால் அனுமதிகளை முற்கூட்டியே பதிவு செய்து கொள்ளவும்
[சி/990]


அராலிக்கு திரும்பிச் சென்ற

# 242 குடும்பங்களுக்கு நிவாரணம் நிறுத்தம்

வலி மேற்கு, ஏப். 19

அராலியில் இருந்து இடம் பெயர்ந்து சென்று நவாலியில் தங்கியிருந்த 242 குடும்பங்களுக்கு இடம்பெயர்ந்த நிவாரணம் நிறுத்தப்பட்டுள்ளது.

போர் இடைநிறுத்த ஒப்பந்தம் அமுலாக்கப்பட்ட பின்னர் மீண்டும் தமது சொந்த இடங்களுக்கு திரும்பியதைக் காரணம் காட்டியே நிவாரணம் நிறுத்தப்பட்டதாகத் தெரிய வருகின்றது.

இந்த 242 குடும்பங்களும் தற்காலிகமாகவே சொந்த இடங்களுக்கு திரும்பியுள்ளதால், தொடர்ந்தும் தங்களுக்கு இடம்பெயர்ந்த நிவாரணம் வழங்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளன. [ஒ-175]

## சென்னையில் இலங்கை வங்கி

சென்னை, ஏப். 19

தமிழ்நாட்டின் தலைநகர் சென்னையில் தனது கிளை ஒன்றை அடுத்த மாத இறுதியில் இலங்கை வங்கி திறக்கவிருக்கிறது.

இலங்கையின் துணைத் தூதுவர் சுசித்தா கௌதமதாஸா சென்னையில் இத்தகவலைத் தெரிவித்தார். [உ]

## சிறுவன் படுகாயம்

யாழ்ப்பாணம், ஏப் 19

பேனாவின் மூடி போன்ற அமைப்பும், பருமனுமுடைய பொருளொன்றை சைக்கிள் டைனமோவில் இணைத்து டைனமோவை இயக்கிய சிறுவன் அது வெடித்ததில் படுகாயமடைந்தான்.

அச்சுவேலி உலவிக்குளம் பகுதியில் நேற்று இடம்பெற்ற இச் சம்பவத்தில் அவ்விடத்தைச் சேர்ந்த பன்னீர்ச்செல்வம் கோகுலன் (வயது 13) என்ற சிறுவனே படுகாயமடைந்தான.

காயமுற்ற சிறுவன் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டான். (உ-15)

## ஆலயங்களில்

சுன்னாகம் ஸ்ரீ கதிரமலைச் சிவன் தேவஸ்தானம் பஞ்சகுண்டயாக மஹோற்சவம் நாளை 20 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது 28 ஆம் திகதி வெள்ளி கிழமை தேர்த்திருவிழாவும் 29 ஆம்திகதி சனிக்கிழமை தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

தினமும் இரவு 8 மணிக்கு சமயப் பேருரை நடைபெறும். உற்சவ காலத்தில் தினமும் பகல் அன்னதானமும் இடம் பெறும். [க-89]

★ ★ ★

சாவகச்சேரி பெரிய மாவடி உழுத்தம்புலம் பிள்ளையார் கோயில் அலங்கார உற்சவம் கடந்த 16 ஆம் திகதிதொடக்கம் நடைபெற்று வருகிறது.

எதிர்வரும் 25 ஆம் திகதி வரை இடம்பெறும் உற்சவ காலத்தில்திரு. இ. ஜெயராஜ் கம்பராமாயண தொடர் விரிவுரையை நிகழ்த்துவார். இறுதி நாளில் பட்டி மன்றமும் நடைபெறும். (க-31)

★ ★ ★

வலிகாமம் மேற்கு சித்தன் கேணி கலைவாணி வீதி அருள்மிகு சாமுண்டாம்பிகா சமேத ஸ்ரீ ஞானவைரவர் ஆலய ஆவர்த்தன பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் நாளை வியாழக்கிழமை காலை 10 . 24 மணிகரு நடைபெற உள்ளது.

கும்பாபிஷேகத்தைத தொடர்ந்து 22 நாட்களுக்கு நடைபெறும் மண்டலாபிஷேக நிகழ்வில, பிரதமகுரு இ வரதராஜக் குருக்கள் தலைமையில் ஆசிரியமணி எம். எஸ். ஸ்ரீதயாளின் தொடர் விரிவுரை இடம் பெறும்.

(க- 28- 152)

## இலங்கை பணிப் பெண்ணுக்கு மரணதண்டனை

கொழும்பு ஏப் 19

ஐக்கிய அரபு எமிரேட்ஸின் வீட்டுப் பணிப் பெண்ணாக பணியாற்றிய இலங்கைப் பெண் ஒருவருக்கு கொலைக் குற்றச் சாட்டின் பேரில் மரண தண்டனை நிறைவேற்றப் பட்டிருக்கிறது.

ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அதிகாரிகள் இதனை உறுதி செய்திருக்கிறார்கள்.

சிறிமுகமட் பாறூக் எனப் படுகின்ற இந்தப் பெண் கடந்த அக்டோபரில் தமது வீட்டு எஜமானனின் குழந்தையை குத்திக் கொன்றதை ஒப்புக் கொண்டிருந்தார் என்றும் அதைத் தொடர்ந்தே நீதிமன்றம் அவருக்கு மரண தண்டனை விதித்த தீர்ப்பு [illegible] (இ-4)

## சேவைக்கால பயிற்சி

தென்மராட்சி கல்வி கோட்டப் பாடசாலைகளின் கணித பாட ஆசிரியர்களுக்கான சேவைக்காலப் பயிற்சி வகுப்புகள் நாளை முதல் மூன்று தினங்கள் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறும் என கோட்டக் கல்விப் பணிப்பாளர் திருமதி புஷ்பா கணேசலிங்கம் அறிவித்துள்ளார். [உ.117]

## அதிபர்கள் கூட்டம்

வலிகாமம் தெற்கு, ஏப். 19

உடுவில் கல்விக் கோட்டப் பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் நாளை வியாழக்கிழமை காலை 9 மணிக்கு இராமநாதன் கல்லூரியில் நடைபெறும் எனவும், சகல அதிபர்களையும் இதில் தவறாது கலந்து கொள்ளும்படியும் பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு. சு. இரத்தினராசா தெரிவித்துள்ளார். (க-152)

## ஆஸ்திரேலிய செய்தியாளர் இன்று வருகை

யாழ்ப்பாணம், ஏப். 19

ஆஸ்திரேலிய ஒலிபரப்புக் கூட்டுஸ்தாபனத்தை சேர்ந்த செய்தியாளர்கள், தொலைக்காட்சியாளர்கள் அடங்கிய குழு ஒன்று இன்று யாழ்ப்பாணம் வர விருக்கிறது

கிளாலியூடாக யாழ். வரும் இவர்கள் சில தினங்கள் இங்கு தங்கியிருப்பர். (உ-3)

## சைவஉணவை நாடும் பிரித்தானிய பெண்கள்!

லண்டன், ஏப். 16

தமது உடலமைப்பை பேணும் வகையில் பிரித்தானிய இளம் பெண்கள் சைவ — தாவர — உணவுகளை விரும்பி உண்ண ஆரம்பித்துள்ளனர்.

லண்டனில் நடைபெற்ற ஒரு கணிப்பீட்டின் போது பிரித்தானிய இளம் பெண்களில் 25 சத வீதமானோர் சைவ உணவை உட்கொள்கின்றனர் என்பது தெரிய வந்துள்ளது.

இந்த மதிப்பீட்டை நடத்திய ரியல் ஈற் வெஜிரேரியன் பூட் [Real Eat Vegetarian Food] நிறுவனத்தின் விற்பனை இயக்குநர் திரு. கிரகம் கீன் விலங்குகளை பாதுகாக்கும் இயக்கத்துக்கும் இதற்கும் எந்தவித தொடர்பும் இல்லை என்று கூறினார்.

இறைச்சியில் கொழுப்பு [கொலஸ்திரோல்] அதிகம் உள்ளது என்ற விஞ்ஞான தகவல் இளம் வயதினர் மனங்களில் ஆழமாக பதிந்திருக்கலாம் என்றும் —

இறைச்சி சாப்பிடும் அவர்களின் தாய்மாரின் தோற்றமும் இவர்களை மாற்றியிருக்கலாம் என்றும் குறிப்பிட்டார்.

பொதுவாகவே சைவ உணவை உண்போர் எண்ணிக்கை உலகளாவிய ரீதியில் அதிகரித்து வருகின்றது என்று கூறப்படுகிறது. [ஒ-14]

## ஸ்ரீலங்காவில் மின்வெட்டு

கொழும்பு, ஏப் 19

ஸ்ரீலங்காவில் மின்சார உற்பத்திக்கான நீர்த் தேக்கப் பகுதிகளில் தொடர்ந்து மழை பெய்யாவிட்டால் ஸ்ரீலங்காவில் மின்வெட்டு நடைமுறைப்படுத்தும் நிலை வரும் என இலங்கை மின்சார சபை பொறியியலாளர் சங்கத்தலைவர் ரி எம். ஹேரத் எச்சரித்திருக்கிறார்.

அடுத்த 79 நாட்களுக்குத் தேவையான மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்குத் தேவையான நீர தற்போது மின்சாரத்தை உற்பத்தி செய்யும் நீர்த்தேக்கங்களில் உள்ளது.

இந்தக் கால எல்லைக்குள் நீரேந்தும் பகுதியில் மழை பெய்யாவிட்டால் மின் உற்பத்தி முற்றாகத் தடைப்படும் என்று அவர் தெரிவித்தார். [உ]

## பூங்கா இன்று மூடியிருக்கும்

யாழ்ப்பாணம், ஏப். 19

அன்னை பூபதி நினைவு நாளை முன்னிட்டு இன்று புதன்கிழமை கேணல் கிட்டு சிறுவர் பூங்கா திறக்கப்பட மாட்டாது என்று அறிவிக்கப் பட்டுள்ளது. (ஆ)

## "நரோமா" பயணிகளுக்கு

''நரோமா'' கப்பலில் எதிர்வரும் 25ஆம் திகதி பயணம் செய்ய யாழ் செயலகத்தில் ஆசனம் உறுதி செய்தவர்கள் இன்றும், நாளையும் தங்கள் பணத்தைச் செலுத்தி பற்றுச்சீட்டை பெறுமாறு யாழ். மேலதிக அரச அதிபர் கேட்டுள்ளார்.

அதேவேளை —

இக்கப் லில் நாளை பயணம் செய்ய ஆசனம் பதிவு செய்தவர்களை நாளை காலை 8 மணிக்கு பருத்தித்துறை துறைமுகத்திற்கு சமுகமளிக்குமாறும் அவர் கேட்டுள்ளார். [உ-3]

# விடுதலைப் போரை உலகிற்கு காட்டும் கலைப்படைப்புகள் தேவை

## நூல்வெளியீட்டில் கவிஞர் புதுவை இரத்தினதுரை

யாழ்ப்பாணம், ஏப். 19

''ஈழத் தமிழ் மக்களின் விடுதலைப் போரை உலகத்துக்குக் காட்டும் கலைப் படைப்புகள் வெளிவர வேண்டும்''.

தமிழீழ விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தின் பொறுப்பாளர் கவிஞர் புதுவை இரத்தினதுரை இவ்வாறு கூறினார்.

இந்த வகையில் ''செவ்வரத்தம்பூ'' சிறுகதைத் தொகுதி உணர்வுபூர்வமானதோர் படைப்பு என்று அவர் கூறினார்.

கடந்த மாதம் அரியாலை சனசமூக நிலைய காசிப்பிள்ளை அரங்கில் ந கிருஷ்ணசிங்கத்தின், ''செவ்வரத்தம் பூ'' சிறுகதைத் தொகுதி வெளியீட்டு நிகழ்வில் கலந்து கொண்டு வெளியீட்டு உரை நிகழ்த்திய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

'நிதர்சனம்' பொறுப்பாளர் திரு நா. தமிழன்பன் தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் சிறப்புரையை சொக்கனும் மதிப்பீட்டு உரைகளை விடுதலைப் புலிகள் உறுப்பினர் தேவர் மற்றும் திருமதி ஆதிலட்சுமி சிவகுமார் ஆகியோரும் மதிப்புரையை யாழ். பல்கலைக்கழக பேராசிரியர் திரு அ. சண்முகதாசும் வழங்கினர்.

முதற்பிரதியை விடுதலைப் புலிகள் உறுப்பினர் திரு. இ. பரதன் பெற்றுக்கொண்டார்.

திருமதி ஆதிலட்சுமி சிவகுமார் தனது மதிப்பீட்டு உரையில். ஒரு படைப்பாளியின் அனுபவங்களே கலை வடிவம் பெறுகின்றன. ஓர் எழுத்தாளனின் அனுபவம், அவனது அறிவையும் ஆளுமையையும் பொறுத்து சிறந்த கலை வடிவமாகின்றது என்றார். [க- 14]


லாவன்யா மூக்குக்கண்ணாடி ஸ்தாபனத்தாரின் ஆதரவில்
சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும்
6 வது ஆண்டு
மாபெரும்
## இரிக்கட் போட்டி

பங்குபற்ற விரும்பும் கழகங்கள் உங்கள் விண்ணப்பங்களை 233, ஸ்ரான்லி வீதி என்னும் விலாசத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்ப முடிவு திகதி:- 23 . 4 . 95
அணி ஒழுங்கு தேர்வு:- 24 . 4 . 95
போட்டிகள் ஆரம்பமாகும் திகதி:- 29 . 4 . 95

பொதுச் செயலாளர்
சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம்
[சி/1043]



# விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி ரோட், யாழ்ப்பாணம்.

"25 வருடமாக கலை, வர்த்தகத்துக்கு தனித்துவம் ஆசிரியர்களின் ஒருங்கிணைந்த சேவை"

பிரிவு | 97 கலை, வர்த்தக வகுப்புக்கள்

ஆரம்பம்: **23 - 4 - 1995** காலை 9 மணி

| | | | | |
|---|---|---|---|---|
| பொருளியல் | — திரு. லோகலிங்கம் | | இந்துநாகரிகம்) இந்துசமயம் | — காரை. சுந்தரம்பிள்ளை |
| வர்த்தகம் | — திரு. வரதன் | | அரசியல் | — திரு சீலன் |
| கணக்கியல் | — திரு. கலைச்செல்வன் | | வரலாறு | — திரு பிரகலாதன் |
| அளவையியல் | — திரு விக்கி | | கிறிஸ்தவம் | — திரு வசந்தன் |
| தமிழ் | — திரு குழந்தை | | நாடகமும் அரங்கியலும்) | — திரு. சத்தியா |
| புவியியல் | — திரு. குணராசா | | | |

மாணவர்கள் எண்ணிக்கை வரையறுக்கப்பட்டது அதனால் அனுமதிகளை முன் கூட்டியே பெற்றுக்கொள்ளவும்.
[சி/998]



பிசாசின்பிடி, பாவம், குடி வெறி. புகைத்தல். பில்லி சூனியம், கொலை இன்னும் தீய பழக்கவழக்கங்களில் இருந்து இயேசு விடுவிக்கிறார்
சமாதானம், சந்தோசம், பாவமன்னிப்பு தருகிறார்.

## இலங்கை பெந்தெகொஸ்தே சபையின் கன்வென்ஷனும் சுவிசேஷ சுகமளிக்கும் ஆராதனைகளும்

20 04-1995 வியாழக்கிழமை மாலை முதல்
23ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை தினமும் மாலை 5.30 மணிக்கு

இடம்: இலங்கை பெந்தெகொஸ்தே சபைச் சாலை, இல. 111, கண்டி வீதி. யாழ்ப்பாணம்.

வெள்ளி முதல் ஞாயிறு வரை

காலை 7-00 மணிக்கு — வேதபாடம்
,, 9-00 மணிக்கு — காலை ஆராதனை
மாலை 3-00 மணிக்கு — பரிசுத்தாவியின் கூட்டம்

பாருங்கள்! கேளுங்கள்!! அனுபவியுங்கள்!!!

இலவச உட்பிரவேசம்
(36315)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# அதிகாரப் பரவல் குறித்த முடிவு புலிகளுடன் பேசிய பின்னரே!

## அமைச்சர் பீரிஸ் கூறுகிறார்

கொழும்பு, ஏப். 19

வடக்கு - கிழக்குக்கு அதிகாரத்தைப் பரவல் செய்யும் விடயம் ஓர் அரசியல் விவகாரமாகும்: இது குறித்த யோசனைகளை உத்தேச அரசமைப்புத் திருத்த நகலில் சேர்ப்பதற்கு முன்னர் விடுதலைப் புலிகளுடன் பேச வேண்டி உள்ளது.

இவ்வாறு நீதி, அரசமைப்புத்துறை அமைச்சர் ஜி. எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

அரசமைப்புச் சீர்திருத்தம் சம்பந்தமான நகல் தயாரிக்கப்பட்டு வருவதாகவும், மக்கள் கருத்தை அறிவதற்காக அது மே மாதத்தில் வெளியிடப்படும் என்றும் அமைச்சர் பீரிஸ் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை நேற்று நடைபெற இருந்த அரசமைப்புச் சீர்திருத்தம் சம்பந்தமான நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் அமர்வு மே 11 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாகவும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அன்றைய தினம் தனது யோசனைகளைத் தெரிவிக்கும் — என்றும் அமைச்சர் சொன்னார்.

அடிப்படை உரிமைகள் நீதிபரிபாலன மீளாய்வு, நிறைவேற்று ஜனாதிபதி முறை, அரசாங்க சேவை, தேர்தல் முறைகளில் சீர்திருத்தம், அரசமைப்புச்சபை ஆகிய அம்சங்கள் குறித்த அத்தியாயங்கள் தயாரிக்கப்பட்டு விட்டதாகவும் அமைச்சர் தகவல் வெளியிட்டார். (அ)

காணாமற் போனோர் குறித்து விசாரணை

# ஜனாதிபதி ஆணைக்குழு 24 இல் மட்டக்களப்பில் கூடுகின்றது

## மே 5 வரை பகிரங்க அமர்வுகள்

கொழும்பு, ஏப். 19

வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளில் காணாமல் போன அல்லது பலவந்தமாக கடத்திச் செல்லப்பட்டவர்கள் தொடர்பாக விசாரிப்பதற்கென நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழு இம்மாதம் 24ஆம் திகதி முதல் மட்டக்களப்பில் அதன் பகிரங்க அமர்வுகளை நடத்தவுள்ளது.

மட்டக்களப்பு வில்லியம் ஓல்ட் ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெற இருக்கும் இந்த பகிரங்க விசாரணைகள் மே மாதம் 5ஆம் திகதி வரை நீடிக்கும்.

1990ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 5ஆம் திகதி வந்தாறு மூலையிலுள்ள கிழக்கு பல்கலைக்கழகத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போது இடம் பெற்ற சம்பவங்கள் குறித்தும் 1990 செப்டெம்பர் மாதம் 9ஆம் திகதி பன்னிச்சையடி, பிள்ளையாரடி, கொக்குவில், சத்துருக்கொண்டான் பகுதிகளில் இளைஞர்களும் வயோதிபப் பெண்களும் சுற்றிவளைப்பு தேடுதலுக்கு உள்ளாக்கப்பட்ட போது இடம் பெற்ற சம்பவங்கள் பற்றியும் ஆணைக்குழு விசாரிக்கும்.

வந்தாறுமூலை பல்கலைக்கழகத்தில் கைது செய்யப்பட்ட 145 பேர்களுக்கு என்ன நடந்தது என்பது பற்றியும் இவ்விரு சம்பவங்கள் தொடர்பாக காணாமல் போனவர்கள் தற்போது எங்குள்ளார்கள் என்பதையும் கண்டறிய ஜனாதிபதி ஆணைக்குழு முயற்சி செய்யும்.

ஆணைக்குழுவிடம் சாட்சியம் அளிக்க விரும்பும் அனைவரும் எதிர்வரும் 25ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வில்லியம் ஓல்ட் ஞாபகார்த்த மண்டபத்தில் ஆணைக்குழுவின் செயலாளருடன் தொடர்பு கொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளனர்.

# தபால்களைத் தரம் பிரிக்கும் பணி இனிமேல் இயந்திரங்கள் மூலம்

## ஒவ்வொரு தபாலகத்துக்கும் 'இலக்கக் குறியீடு'

கொழும்பு, ஏப். 19

தபால் சேவையில் நீண்ட காலமாக நிலவி வரும் பல்வேறு குறைபாடுகளை நீக்கும் முகமாக, தபால்களை தரம் பிரிக்கும் பணி இனிமேல் இயந்திரங்கள் மூலம் மேற்கொள்ளப்படும்.

இத்தகவலை தபால், தொலைத்தொடர்பு அமைச்சின் செயலர் ஒலி ஜெயவர்த்தன கடந்த திங்கட்கிழமை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நவீன இயந்திரங்கள் மூலம் தபால்களைத் தரம்பிரிக்கும் பணி மேற்கொள்ளப்படுவதால், தபால் சேவையில் காணப்படும் தவறுகளும், வீண் காலதாமதங்களும் நீக்கப்படும்.

இந்த புதிய முறையின்படி நாட்டிலுள்ள தபால் கந்தோர் ஒவ்வொன்றுக்கும், ஒவ்வொரு 'இலக்கக் குறியீடு' (Post Code) வழங்கப்படும்.

இதன்படி, ஒருவர் தாம் அனுப்பும் கடிதத்தின் உறையின் மேல் கிடைக்க வேண்டிய முகவரியைத் தெளிவாக எழுதுவதோடு, குறிப்பிட்டவரின் தபால் கந்தோருக்குரிய குறியீட்டு இலக்கத்தையும் கடித உறையில் எழுத வேண்டும்.

அதேபோல், அனுப்புபவரின் பகுதிக்குரிய தபாலக குறியீட்டு இலக்கமும் கடித உறையின் மேல் குறிப்பிடப்பட வேண்டும்.

இவ்வாறு குறியீட்டு இலக்கத்தின் அடிப்படையில் தபால்களைத் தரம் பிரிக்கும் பணி (Post Coding Operations) ஏற்கனவே இந்தியா, பங்களாதேஷ், இந்தோனேஷியா, ஜப்பான், அவுஸ்திரேலியா, நியூஸிலாந்து, கொரியா போன்ற நாடுகளில் நடைமுறையில் உள்ளது.

தற்போது நாட்டிலுள்ள சகல தபாலகங்களுக்கும் இலக்கம் வகைப்படுத்தும் பணி விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இந்த புதிய முறைக்கு ஏற்ற வகையில் கடித உறைகளை தயாரிப்பதற்கும், கடித உறை தயாரிப்பாளர்களுக்கு அறிவுறுத்தப்படவுள்ளது.

# அரசு முயற்சிக்கு படையினர் ஆதரவு வழங்க வேண்டும்

## ராணுவத் தளபதி ஜெரி அறிவுறுத்து

வடக்கு - கிழக்கு இனப் பிரச்சினைக்கு சமாதானத் தீர்வொன்றைக் காண புதிய அரசாங்கம் கடும் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது இதற்கு முழு ஆதரவையும் வழங்குவது பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டுள்ள சகலரதும் கடமையாகும் என்று இராணுவத் தளபதி லெப். ஜெனரல் ஜெரிடி சில்வா தெரிவித்துள்ளார்.

பலாலி, வயாவிளான் இராணுவமுகாமில் கடந்த 13 ஆம் திகதி நடைபெற்ற புத்தாண்டு விழாவில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு பேசியபோது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மோதல் தவிர்ப்புடன்பாடு நடைமுறைக்கு வந்ததன் பின்னர் இராணுவ வீரர்கள் தமது கடமைகளை முறையாகச் செய்துள்ளனர். இதற்கு அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன் எனவும் அவர் தெரிவித்தார். [ஓ-4]

## தபால்களை சேர்க்குக!

யாழ்ப்பாணம், ஏப். 19

நாளை வியாழக்கிழமை புறப்படும் ''ஸ்டான்சர்'' கப்பலில் தபால்கள் அனுப்பப் படவுள்ளதால்—

இன்று மாலை 4மணிக்கு முன் யாழ் பிரதம தபாலக அஞ்சல் பெட்டியில் கடிதங்களைச் சேர்க்குமாறு யாழ். பிரதம அஞ்சல் அதிபர் திரு. சு. கோடீஸ்வரன் கேட்டுள்ளார். [ஓ]

மோதல் தவிர்ப்பு காலப்பகுதியில்

# கிழக்கில் சிங்கள, முஸ்லிம் மக்களை அரசு தீவிரமாக குடியேற்றிவருகிறது

## அரசியல் துணைப் பொறுப்பாளர் பேட்டி

யாழ்ப்பாணம், ஏப். 19

மோதல் தவிர்ப்புக் காலப் பகுதியில் கிழக்கு மாகாணத்தில் மிகப்பெரிய அளவில் அரசாங்கம் குடியேற்றங்களை செய்துகொண்டு வருகிறது. மகாவலி சீ— வலயத்தில் மாவட்டத்தின் எந்தவித நிர்வாகங்களும் செல்லுபடியாகாது என்று கூறி மகாவலி வடமுனைக்கு கீழ் இருக்கும் காணிகளில் மிக வேகமாக காடுகள் அழிக்கப்பட்டு வீடுகள் கட்டப்பட்டு சிங்களவர் குடியமர்த்தப்பட்டு வருகிறார்கள்.

கிழக்கின் தற்போதைய நிலை குறித்து அங்கு சென்று திரும்பிய அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் திரு. க. கரிகாலன் செய்தியாளர் மாநாட்டில் மேற்கண்டவாறு தெரிவித்தார். நேற்று முன்தினம் மாலை அரசியல் துறை நடுவப் பணியகத்தில் நடைபெற்ற இம்மாநாட்டில் திரு. கரிகாலன் மேலும் தெரிவித்ததாவது;

சிங்களவர் குடியேற்றப்படும் அதேவேளை முஸ்லிம்களும் எல்லைப் பிரதேசங்களில் குடியமர்த்தப்பட்டு வருகின்றனர். றெஜிதென்ன என்ற கிராமத்திலே 300 குடும்பங்கள் மோதல் தவிர்ப்பு உடன்படிக்கை காலப் பகுதியில் குடியமர்த்தப்பட்டுள்ளன. கேணி மடு என்ற கிராமப் பகுதியில் 150 வீடுகள் அவசர அவசரமாகக் கட்டப்பட்டு வருகின்றன.

### புனர்வாழ்வு நிதியைக் கொண்டு குடியேற்றம்

புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சராக அஷ்ரப் இருப்பதனால் புனர்வாழ்வு புனரமைப்பு நிதியைக் கொண்டு குடியேற்றங்கள் அங்கு வேகமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதே போன்று ஊற்றுச் சேனை, வடமுனை பகுதிகளில் தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் வாழுகிறார்கள் முஸ்லிம மக்களுக்கு மீளக் குடியமர்வுக்கான கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ள. ஆனால் தமிழ் மக்கள் திரும்பவும் அதே இடத்தில் குடியேறுவதற்காக விரும்பிக்கேட்டும் கூட அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. இங்கு தமிழ் மக்கள் குடியமர்த்தப்படவில்லை. முஸ்லிம மக்கள் அனுமதி வழங்கப்பட்டு குடியேற்றப்பட்டுள்ளார்கள்.

இதேபோன்று அம்பாறை மாவட்டத்திலும் தமிழ் மக்கள் தங்கள் சொந்த இடங்களுக்குத் திரும்ப விருப்பம் தெரிவித்தும் இதுவரையில் அவர்கட்கு அனுமதி மறுக்கப்பட்டிருக்கிறது. இப்பதாதும் அவர்கள் உறவினர்கள் நண்பர்கள் வீடுகளில் ரோன் அகதிகளாக இருக்கிறார்கள்.

### வீடுகள் அமைக்க அனுமதி இல்லை

அகதிகளாக இருந்து மீளக் குடியமர்ந்த கிராமங்களிலும் நிரந்தரமாக வீடுகள் அமைப்பதற்கும் இன்னமும் அனுமதி வழங்கப்படவில்லை. அதற்கான நிதிகளும் வழங்கப்படவில்லை அதே நேரம் முஸ்லிம்களுக்கும், சிங்களவர்களுக்கும் நிதிவழங்கப்பட்டு வீடுகள் அமைக்கப்பட்டுள்ளன.

தமிழர்களுக்கு வீடமைப்புக் கடன் வசதிகள் எதுவும் செய்து கொடுக்கப்படவில்லை. தற்காலிகமாக அமைக்கப்பட்ட சிறிய குடிசைகளில் தான் அவர்கள் தொடர்ந்து வாழ்ந்து வருகிறார்கள்

இங்கு முஸ்லிம்களின் நெருக்கம் தமிழ் மக்களை ஓர் ஆக்கிரமிப்புககு உள்ளாக்கியிருக்கின்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் முஸ்லிம்கள் அமைச்சர்களாக இருப்பதில் தங்களின் நிலையைப் பலப்படுத்துவதற்காக தொழில் மையங்களிலும் முஸ்லிம அதிகாரிகளை நியமித்து தொழில் மையங்களையும் தங்களின் ஆக்கிரமிப்புக்குள் கொண்டு வர வேண்டும் என்ற நோக்கத்தில் செயல் பட்டு கொண்டு இருக்கிறார்கள். இதனால் தமிழ் மக்கள் எல்லாப் பக்கத்தினாலும் கிழக்கில் நெருக்குதலுக்கு உள்ளாகியிருக்கிறார்கள்.

### தட்டிக் கேட்க ஆள் இல்லை

மோதல் தவிர்ப்பு காலப் பகுதியில் நடைபெறுகின்ற மிகப்பெரிய இந்தக் குடியேற்றங்களை தட்டிக் கேட்பதற்கு ஒரு வரும் இல்லாத நிலையில் இருக்கின்றது. ஏனெனில் மாவட்ட நிர்வாகத்திற்குள் இக்குடியேற்றம் இல்லை என்று சொல்லுகிறார்கள். மகாவலி பிரதேசம் மகாவலி அபிவிருத்திச் சபை எடுக்கின்ற முடிவைக் கொண்டுதான் குடியேற்றங்களில் யார் யாரைக் குடியேற்றுவது என்ற முடிவுகள் எடுக்கப்படும். இங்குள்ள அரச அதிபரோ அல்லது வேறு எவருமோ கேட்க முடியாத நிலை அங்கு நிலவுகிறது

இதேபோன்று 85 ஆம் ஆண்டு திம்புபேச்சுவார்த்தை நடந்துகொண்டிருந்த காலத்தில் 10 ஆயிரம் சிங்களவர்களைகுடியமர்த்திதெஹிவத்தகண்டி என்ற பிரதேச செயலர் பகுதியையே உருவாக்கினார்கள். மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள எல்லைப் பிரதேசத்தை இதன் மூலம் கைப்பற்றினார்கள்.

இதே நடைமுறையை ஒவ்வொரு பேச்சுவார்த்தை காலத்திலும் அரசாங்கம் தொடர்ச்சியாக செய்து கொண்டே இருக்கிறது. கிழக்குமாகாணத்தில்இப்படிப்பட்ட ஒரு நெடுபிடிக்குமத்தியில் தான் இன்றைய பேச்சுவார்த்தையும் மோதல் தவிர்ப்பு உடன்பாடும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

### ஆத்திர மூட்டும் நடவடிக்கையில் இராணுவம்

இராணுவம் தொடர்ச்சியாக ஆத்திரமூட்டும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறது ஒரு யுத்தத்தை எதிர் நோக்கி மோதலை திரும்பவும் ஏற்படுத்தவேண்டுமென்ற நோக்கில்அரசும் இராணுவமும் தொடர்ந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றன.

அரசாங்கத்தோடு இணைந்து நிற்கும் முஸ்லிம்களினால் கிழக்கில் இன்று பெரும் குழப்பங்கள் உண்டாக்கப்படுகின்றன

அதிகாரிகளினது எந்தவித பணிப்புரையும் இல்லாமல் அமைச்சர்கள் மட்டத்தில் சில முடிவுகள் எடுக்கப்பட்டு வாழைச்சேனை பஸ் டிப்போவில் முஸ்லிம்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். உயர் பதவிகளுக்கு இவர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

இவ்விடயம் அங்கு ஒரு முஸ்லிம்—தமிழ் குழப்பத்தை உருவாக்குவதற்கான சூழ்நிலையை உருவாகியுள்ளது.

மோதல் தவிர்ப்பு உடன்படிக்கை தலைவர் கையொப்பமிட்ட ஒப்பந்தம் ஆனதால் விடுதலைப் புலிகள் இதை மீற மாட்டார்கள் என்ற நம்பிக்கையில் இனத்துவேசத்தை கிளறிவிடும் நடவடிக்கையாகத்தான் இதை செய்து கொண்டிருக்கிறார்கள்

### அஷ்ரப் தலைமையில் கூடி முடிவுகள்

இதே போன்று [illegible] பல்கலைக் கழகத்தையும் வந்தாறு மூலையில் இருந்த வளாகங்களை திரும்பவும் மட்டக்களப்புக்கு கொண்டு செல்லுவதற்காக அஷ்ரப் தலைமையில் கூட்டம் கூடி முடிவெடுக்கப்பட்டிருக்கிறது.

இவையெல்லாம் கிழக்கில் ஒரு பதற்றமான நிலையையும் ஒரு மோதல் நிலையையும் உருவாக்குவதற்கான முயற்சிகளாகவே கருதுகின்றோம்.

திருகோணமலை பிரதேசத்தில் மூதூர் பகுதியில் ஈச்சிலம்பத்தையில் உணவுப் பொருள்களை வாங்க முடியாது உணவுப் பொருள்களுக்கு என்று இராணுவத்தினர் ஒரு 'காா்ட்' வழங்கியுள்ளனர்.

என்னென்ன அளவுகளில் உணவுப் பொருள்களை பெற்றுக்கொண்டு வரவேண்டுமென்று இராணுவத்தினர் உத்தரவிடுகின்றனர்.

மோதல் தவிர்ப்பு காலத்தில் பொருளாதாரத் தடை நீக்கப்பட்டிருந்தும் நிலைமை அங்கு சுமுகமாக இல்லை. இராணுவத்தின் கெடுபிடிகளுக்கு மத்தியில்தான் ஈச்சிலம்பத்தை கிராம மக்கள் வாழ்ந்துவருகிறார்கள். இராணுவ முகாம் ஊடாக போவதாக இருந்தால் இராணுவத்துக்கு ஏதாவது கொடுக்க வேண்டும். விறகு கொடுக்க வேண்டும் அல்லது விறகை கொத்திக்கொடுக்க வேண்டும் வேலை செய்துவிட்டே உணவுப் பொருள்களை எடுத்துச் செல்லமுடியும்.

அப்படிப்பட்ட ஒரு கெடுபிடியான நிலையில்தான் இப்பொழுதும் மக்களை இராணுவத்தினர் வைத்துள்ளனர்.

### திருகோணமலையிலும் இதே நிலைமை

திருகோணமலையிலும் மீள் குடியேற்றத்திற்கு தமிழர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டிருக்கிறது. இப்படியான தொரு சூழ்நிலையில்தான் இன்றைக்கு தமிழ் மக்கள் கிழக்கில் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள்.

இந்த நிலையில் அரசாங்கத்திடம் எல்லாப் பிரச்சினைகளையும் விரிவாக எடுத்துக் கூறியும் எந்தவித மாற்று நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

[illegible] னார். (ஓ-4)

# பேச்சுவார்த்தைக் காலத்தில் வழமையாக நடப்பது இதுதான்

# அன்னைபூபதி பொது அறிவுத் தேர்வு கோட்ட மட்டத்தில் தெரிவானோர்

யாழ்ப்பாணம், ஏப். 19

தற்கொடையாளி அன்னை பூபதியின் 7 ஆம் ஆண்டு நினைவை முன்னிட்டு நடத்தப்பட்ட, அன்னை பூபதி பொது அறிவுத் தேர்வு முடிவுகள், நேற்றும், நேற்று முன்தினமும் உதயன் பத்திரிகையில் வெளியாகி இருந்தன. இறுதிப் பகுதி வருமாறு:

### சண்டிலிப்பாய் கோட்டம்

ஆண்டு 7

குணரத்தினம் ஜெயப்பிரகாஸ் (சண்டிலிப்பாய் இந்து ம. வி).

ஆண்டு 8

சுமித்திரா கனகரத்தினம் (சண்டிலிப்பாய் இந்து ம வி.), இராசரத்தினம் திலீபன் (சுதுமலை சிந்மயபாரதி வி.), ஏகாம்பரநாதன் தினேஸ்சங்கர் (சுதுமலை சிந்மயபாரதி வி).

ஆண்டு 9

மரியநாயகம் டன்ஸ்ரன் வசிகரன் (இளவாலை புனித ஹென்ரியரசர்), இரத்தினம் தயாளன் (சண்டிலிப்பாய் இந்து ம. வி.), பரமசிவம் தர்சினி (நவாலி ம. வி.).

ஆண்டு 10

மகேஸ்வரன் குகராஜன் (நவாலி ம. வி), வரபபிரகாசம் செல்றிரன் ஜேசுறாஜ் பிரகாஸ் (இளவாலை புனித ஹென்றியரசர்), அல்பிறட் அன்றா பிரபாகரன் [இளவாலை புனித ஹென்றியரசர்), மூத்ததம்பி பாலேந்திரன் (நவாலி ம வி).

ஆண்டு 11

சாருகா பொன்னுத்துரை (பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி), மகாதேவன் சிவசேயன் (புனித ஹென்றியரசர் கல்லூரி), அனுசியா சிங்கராசா [ஆனைக்கோட்டை றோ. க பா].

ஆண்டு 12/13

ஆனந்தன் லோகேஸ்வரன் (மானிப்பாய் இந்துக் கல்லூரி), கணேசநாதன் சிறிஸ்காகன் (புனித ஹென்றியரசர் கல்லூரி), செல்வராசா கபிலன் (புனித ஹென்றியரசர் கல்லூரி)

### யாழ்ப்பாணக் கோட்டம்

ஆண்டு 6

உபயசேகரம் செந்தூரன் (பரியோவான் கல்லூரி), செல்வன் சி. ஆரூரன் (பரியோவான் கல்லூரி), கார்த்திகா அச்சுதம்பிள்ளை (திருக்குடும்ப கன்னியர் மடம்).

ஆண்டு 7

குமரகுருநாதன் பிரதீபன் (பரியோவான கல்லூரி), சிவபாலன் பிரணவன் (பரியோவான் கல்லூரி), கருணாகரன் பாலமுருகன் (பரியோவான் கல்லூரி).

ஆண்டு 8

இராஜநந்தி இராமச்சந்திரன் (வேம்படி மகளிர் கல்லூரி), எம். ஆர். லக்மன் (சம்பத்திரிசியார் கல்லூரி), நீரஜா தியாகராஜா (வேம்படி மகளிர் கல்லூரி).

ஆண்டு 9

மனோரதி மனோகரன் (கண்டுக்குளி மகளிர் கல்லூரி), ஸ்ரீசாந்தினி நல்லநாதன் (வேம்படி மகளிர் கல்லூரி), லதாங்கி மிருஞ்ஜெயம் (வேம்படி மகளிர் கல்லூரி).

ஆண்டு 10

செல்வநாயகம் தர்மசிலன் (பரியோவான் கல்லூரி), கிறிஸ்ரா நிஷாந்தினி ஆன்ரன் (வேம்படி மகளிர் கல்லூரி), ரம்யா இரட்ணசிங்கம் (வேம்படி மகளிர் கல்லூரி).

ஆண்டு 11

சிவகௌரி யோகலிங்கம் (வேம்படி மகளிர் கல்லூரி), தில்லையம்பலம் விஸ்வதிதன் (பரியோவான் கல்லூரி) சிவஞானசுந்தரம் சிறீந்தன் (பரியோவான் கல்லூரி).

ஆண்டு 12, 13

கஸ்தூரி சச்சிதானந்தன் (வேம்படி மகளிர் கல்லூரி), சர்மிலி சின்னத்தம்பி (வேம்படி மகளிர் கல்லூரி), குணரத்தினம் பிரதீபன் (பரியோவான் கல்லூரி).

### தெல்லிப்பழைக்கோட்டம்

ஆண்டு 6

காயத்திரி சிற்சபேசலிங்கம் (தெல்லிப்பழை யூனியன் கல்லூரி), பொன்ராசா கேதாரன் (மகாஜனக் கல்லூரி), இரத்தினம் சியாமளன் (மகாஜனக் கல்லூரி)

ஆண்டு 7

சிவஞானசுந்தரம் ஆரூரன் (மகாஜனாக் கல்லூரி), பிரியதர்சினி அருளானந்தம் (மல்லாகம் ம. வி.), சண்முகராசா நிர்மலன் (மகாஜனக் கல்லூரி)

ஆண்டு 8

சிவராஜா இராஜபுத்திரன் (யூனியன் கல்லூரி) இரட்னேஸ்வரன் குமரன் (யூனியன் கல்லூரி), யேசுராஜா ஜெரால்ட் (குளமங்கால் றோ. க. த. க பா)

ஆண்டு 9

ஆனந்தராசா சாயிராம் (யூனியன் கல்லூரி), மணிவம் மயூரன் (வசாவிளான் ம. ம வி), முருகதாசன் மயூராஜ் (மகாஜனக் கல்லூரி),

ஆண்டு 10

சிவபாலரத்தினம் சிவருபன் (மகாஜானக் கல்லூரி) சிவனேசன பிரபாகரன் (யூனியன் கல்லூரி), வைத்தீஸ்வரன் சாரங்கன் (மகாஜனக் கல்லூரி),

ஆண்டு 11

விஜிதா நாகராஜன் (மகாஜனக கல்லூரி), தயாளினி தேவதாசன் (இளவாலை மெய்கண்டான் ம ம. வி) வைத்தீஸ்வரன் கிரிதர (மகாஜனக் கல்லூரி)

ஆண்டு 12/13

கெங்காதரன் இந்திரமோகன் (யூனியன் கல்லூரி) சச்சிதானந்தம் சஞ்சயன் (யூனியன் கல்லூரி), கணபதிப்பிள்ளை கோகிலன் (மகாஜனக் கல்லூரி)

### பளைக் கல்விக் கோட்டம்

ஆண்டு 6

சந்திரசேகரம் - திவாகர் [பளை மத்திய கல்லூரி]

ஆண்டு 7

இதயராஜன் - இதயரூபன் [பளை மதத்திய கல்லூரி]

ஆண்டு 8

கந்தசாமி - பிரபாகரன் [பளை மத்திய கல்லூரி], வைத்திலிங்கம் - ரஜவிகாந்தன் (இயக்கச்சி அ. த. க. பா], ஜீவேனாதினி - தர்மகுலசிங்கம் [சோரன்பற்று சி. சி. த. க பா.]

ஆண்டு 9

சரிதா - இரத்தினசிங்கம் [வேம்பொடுகேணி சி. சி. த. க.], யாழினி - இராஜரட்ணம் [பளை மத்திய கல்லூரி], சிவபாதம் - சஜீந்தன் [பளை மத்திய கல்லூரி]

ஆண்டு 11

காசிப்பிள்ளை - நிர்ஜனன் (பளை மத்திய கல்லூரி], துஸ்யந்தி - சிவசம்பு [பளை மத்திய கல்லூரி), சின்னத்துரை - பாலேந்திரன் [இயக்கச்சி அ. த. க. பா).

ஆண்டு 12, 13

மகாலிங்கம் - சாந்தீபன் [பளை மத்திய கல்லூரி], தியாகராஜா- சுஜீவன் [பளை மத்திய கல்லூரி], வேலுப்பிள்ளை - தவச்செல்வம் [பளை மத்திய கல்லூரி]

### பெறுபேற்று நிலையில் மாற்றம்

அன்னை பூபதி நினைவு பொது அறிவுத் தேர்வு 10 ஆம் ஆண்டு தேசிய மட்டத்தில் முதலாம் இடம் பெற்ற மாணவன் பெயர் மகேந்திரராஜா பிரணவன் என்பதற்குப் பதிலாக அருளம்பலம டானியல் சுரேந்திரன் என மாறி வந்துள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

10 ஆம் ஆண்டு பருத்தித்துறைக் கோட்டத்தில் முதலாமிடத்தைப் பெறுபவர் என அறிவிக்கப்பட்டவர் தேசிய மட்டத்தில் மூன்றாம் பரிசைப் பெறுவதால் பருத்தித்துறை கோட்ட மட்டத்தில 2ஆம், 3ஆம் இடங்களைப் பெறுவதாக அறிவிக்கப்பட்ட மாணவர்கள் 1ஆம், 2ஆம் இடத்தைப் பெறுகின்றனர். 3ஆம் இடத்தை ஹாட்லிக் கல்லூரி மாணவன் மரியதாஸ் பிரதீபன் பெறுகிறார்.

தேசிய மட்டம் 11ஆம் ஆண்டுக்கான மூன்றாவது பரிசை ஹாட்லிக் கல்லூரி மாணவன் சந்திரகாசனும் மல்லாகம் ம வித்தியாலய மாணவன் சிவஞானசுந்தரம் வதயாபரன் என்பவரும் பெறுதாகவும் அறிவிக்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

அச்சுவேலி சிவஸ்ரீ ச. குமாரசுவாமிக்குருக்கள் அவர்களின் சிவாகமசேகரம் இரண்டாம் பாகம் வெளிவந்துள்ளது. கிடைக்கும் இடம் வை. கனகசபாபதிக்குருக்கள், அச்சுவேலி. [36291]

அரிசி ஆலைக்கு உரிய இயந்திரங்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு: பார்வதி இறைண்டிங் மில், கண்டி வீதி, சாவகச்சேரி. [36289]

### கோழிக்குஞ்சு விற்பனை

Prima Lohmann இரண்டு கிழமைகள் நிரம்பிய வெள்ளை பேட்டுக்குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. Broiler இறைச்சிக்குஞ்சுகள் 22-4-95 சனிக்கிழமை பெற்றுக்கொள்ளலாம். நல்லூர் வீடியோ சென்ரர், இல. 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். [36306]

### காணி விற்பனைக்கு

உரும்பிராய் தெற்கில், பலாலி வீதிக்கு மேற்கே 'ஹ்ரீம்' இல்லத்திற்குப் பின்னால் விசாலமான ஒழுங்கை வசதியுடன் கூடிய களஞ்சியத்திற்கான கட்டடம் உள்ளடக்கியதுமான 2½ பரப்புக்காணி விற்பனைக்குண்டு. தொடர்பு; 527, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (சி-1040)

### தேவை

லேடன் டீசல் லொறி வேலையில் அனுபவம் உள்ள மெக்கானிக்கும், உதவியாளரும் தேவை. க. சிவலிங்கம், சிவலிங்க மோட்டோர்ஸ், இல 77, மானிப்பாய் றோட், யாழ்ப்பாணம் [8492]

தாயும் மகனும் வசிப்பதற்கு தனியாகவோ அன்றி பகுதியாகவோ வசதியான வீடு ஒன்று வாடகைக்கு தேவை. சுன்னாகம், இணுவில், யாழ்ப்பாணம் விரும்பத்தக்கது. தொடர்புகொள்ள வேண்டிய முகவரி: 47, மே/பா உதயன் சேவை நிலையம், கே. கே. எஸ். றோட், சுன்னாகம். [8326]

### காணாமற்போனது

கடந்த (14-4-95) மாலை குளப்பிட்டி சந்திக்கும், ஆனைக்கோட்டை சந்திக்கும் இடையில் கொனிக்கா புகைப்படக்கருவி தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம். சுகந்தன் பார்மசி, கொக்குவில் சந்தி. (36294)

### வீனஸ் அன்ரனா

ரூபவாஹினி, மட்றாஸ் நிகழ்ச்சிகளை பார்ப்பதற்கு T.V. அன்ரனா பொருத்துதல், பழுது பார்த்தல், T.V. டெக், றேடியோ, மணிக்கூடுகளை திருத்திக்கொள்வதற்கு வீனஸ் டில்கா வாச் அன்ட் றேடியோ வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி (ஆரியகுளம் சந்தி), யாழ்ப்பாணம். கிளை: கண்டி வீதி, சாவகச்சேரி. [சி-649]

### வேலைவாய்ப்பு

1994 A/L உயிரியலில் 300 புள்ளி வரை எடுத்தவர்கள் முழு விவரங்களுடன் விண்ணப்பிக்கவும். மாதம் 5,000 ரூபா கொடுக்கப்படும். கடித மூலம் தொடர்புகொள்ளவும். மே/பா 782, உதயன், யாழ்ப்பாணம். (36293)

### SPOKEN ENGLISH

அதிரடிப பாணியில Spoken English with Grammar கற்பிக்கப்படுகிறது V N Kandasamy A I B Part-I (London) Inter (London) Dip - in - English இல 87 திருநெல்வேலி றோட் (ரயில் கடவைக்குச் சமீபமாக), கொக்குவில். [8491]

### மணமகன் தேவை

குறைபாடற்ற 36 வயது ஆசிரியருக்கும், 46 வயது எழுதுவினைஞருக்கும், 37 வயது ஆசிரியருக்கும், 32 வயது கிளார்க்குக்கும் தேவை. மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம். [36227]

### மிருதங்கம்

தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் மிருதங்க பரீட்சை திருத்த வேலைகள் உடன் செய்து கொடுக்கப்படும். கோவிந்தபிள்ளை விஜயகுமார், இல. 192/1, நாவலர் றோட், பெருமாள் கோவிலடி, யாழ்ப்பாணம். (36273)

## இந்தியாவுக்கு ஈரானிய அதிபர்

புதுடில்லி, ஏப். 19

ஈரானிய ஜனாதிபதி அல்ரஜ் சஞ்சானி மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயமாக நேற்று முன்தினம் புதுடில்லி சேர்ந்தார்.

அவரை பிரதமர் நரசிம்மராவ் விமான நிலையத்துக்குச் சென்று வரவேற்றார்.

பின்னர் ராஷ்ரபதி பவனில் ஈரானிய ஜனாதிபதிக்குச் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. [அ]

## M. E. C.

ரயில் றோட் கந்தர்மடம்

**A\L 97**

இரசாயனவியல்
செல்வா B. sc.

ஆரம்பம்:
**21 - 04 - 95**
பி.ப. 4 மணி

[8495]

## 90-ம் நாள் நினைவஞ்சலி

உதயம்: 31 — 07 — 1959 கம்பர்மலை வடமராட்சி



மறைவு: 19 — 01 — 1995 மொன்றியல் கனடா

### அமரர் மார்க்கண்டு கமலாகரன்

எங்கள் நெஞ்சிருக்கும் வரை உமது நினைவிருக்கும்.

ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்
மனைவி, பிள்ளைகள்,
(கனடா)
பெற்றோர், சகோதர, சகோதரி.

தகவல்; மா. கமலதாஸ்,
இந்தியா.

(36292)

# புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

G. C. E.

## A/L - 97

### கலை - வர்த்தகப் பிரிவுகள்

ஆரம்பம்: **30 - 04 - 1995**
(ஞாயிறு காலை 9மணி)

★ திங்கள் (17 — 04 — 95) தொடக்கம் வெள்ளி (21 — 04 — 95) வரை அனுமதிகள் வழங்கப்படுகின்றன.
★ மாணவர் தொகை வரையறுக்கப்பட்டுள்ளதால் பதிவுகளை முன் கூட்டியே செய்து கொள்ளவும்.

| | | |
|---|---|---|
| பொருளியல் | — | திரு. மகேந்திரன் |
| கணக்கியல் | — | திரு. உருத்திரசிங்கம் |
| வர்த்தகம் | — | திரு. சத்தியதாசன் |
| அளவையியல் | — | திரு. சோதிலிங்கம் |
| இந்து நாகரிகம் | — | திருமதி அருள்நங்கை |
| இந்து சமயம் | — | திரு. கிரிதரன் |
| கிறிஸ்தவ நாகரிகம் | — | திரு. அமலதாஸ் |
| தமிழ் | — | திரு. குழந்தைவேலு |
| புவியியல் | — | கலாநிதி குணராஜா<br>திரு சண்முகராஜா |
| நாடகமும், அரங்கியலும் | — | திரு. குழந்தை சண்முகலிங்கம் |
| அரசியல் | — | திரு. கியூபேப் |
| வரலாறு | — | திரு. சின்னராஜா |
| சித்திரம் | — | திரு. சிவப்பிரகாசம் |

# சிவாகி கல்வி நிலையம்

சிவன் வீதி, சாவகச்சேரி.

**97** கலை, வர்த்தக வகுப்புகள்

ஆரம்பம்: **20 - 04 - 1995**
வியாழன் காலை 8 மணி

| | | |
|---|---|---|
| பொருளியல் | — | லோகசிங்கம் |
| வர்த்தகம் | — | வரதன் |
| கணக்கியல் | — | கொலின்ஸ் |
| புவியியல் | — | நித்தி |
| இந்துநாகரிகம்<br>இந்துசமயம் | — | சுதமதி |
| தமிழ் | — | தர்மராஜா |
| அளவையியல் | — | குகன் |
| அரசியல் | — | பொன். சந்துரு |

(36305) — நிர்வாகி.

## தமிழீழ சட்டக்கல்லூரி
## கல்வி ஆண்டு 1995 - 1996
## மாணவர்களுக்கான
# விண்ணப்பம் கோரல்

தமிழீழ சட்டக்கல்லூரியின் மேற்படி ஆண்டுக்கான பயிற்சி விரிவுரைகள் நடைபெற இருப்பதால் இக் கல்வி நெறியைப் பயில்வதற்கு கீழ் குறிப்பிடப்படும் தகைமைகளை உடைய மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

காலம்: மூன்று வருடங்கள்

கல்வித்தகைமை:

க. பொ. த. (உ/த) பரீட்சையில் சித்தியடைந்து இருப்பதுடன் அவற்றில் இரண்டு பாடங்களில் திறமைச் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். க. பொ. த. சாதாரணதரப் பரீட்சையில் தமிழ், ஆங்கிலம் ஆகிய பாடங்களில் திறமைச் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

வயது: **19 - 35**

விண்ணப்பம் செய்ய விரும்புவோர்கள் அதற்கான விண்ணப்பப்படிவத்தைக் கோண்டாவில், பொற்பதி வீதியில் உள்ள நீதி நிர்வாகத்துறையின் நடுவப் பணியகம், வன்னி, மன்னார், முல்லைப் பிரதேச நீதி நிர்வாகத்துறை கிளை நடுவப் பணியகம். தமிழீழ மாவட்ட நீதிமன்றுக்களின் செயலகங்கள் ஆகிய இடங்களில் பெறறுக்கொள்ளலாம். இவ் விண்ணப்பப் படிவங்களை பூர்த்தி செய்து 30 - 05 - 1995 ஆம் திகதிக்கு முன்னர் கீழ் குறிப்பிடப்படும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

பொறுப்பாளர்,
நடுவப் பணியகம்,
நீதி நிர்வாகத்துறை.
தமிழீழ விடுதலைப் புலிகள்,
கோண்டாவில்,
யாழ்ப்பாணம்.

[சி-1039]

## கலை வர்த்தகக் கல்லூரி
# C. C. A.

வெலிங்டன் சந்திக்கு அருகில், யாழ்ப்பாணம்.

## A/L - 97

ஆரம்பம்: **22 - 04 - 1995**
காலை 8-00 மணி

யாழ் நகரில் திறமைவாய்ந்த பட்டதாரி ஆசிரியர்களின் சேவையினை வழங்கும் ஒரே நிறுவனமும் மாற்றமடையும் புதிய பாடத்திட்டத்திற்கு ஏற்ப கற்பிக்கும் தகுதி பெற்ற ஆசிரியர்களைக் கொண்டதுமான!

### எமது ஆசிரியர் குழு

| | | |
|---|---|---|
| பொருளியல்: | — | திரு. உதயன் |
| கணக்கியல்: | — | திரு. ஸ்ரீ |
| வர்த்தகம்: | — | திரு. இரட்ணம் |
| அளவையியல்: | — | திரு. சயந்தன் |
| தமிழ் | — | திரு. கணேஸ் |
| இந்து நாகரிகம் | — | திரு ஜோதீஸ்வரன் |
| புவியியல் | — | திரு. வேலா |
| இந்து சமயம் | — | திரு. ஜோதீஸ் |
| அரசியல் | — | திரு. பஞ்சு |
| கிறிஸ்தவம் | — | திரு. நோபேட் |
| நாடகமும்<br>அரங்கியலும் | — | திரு. திலகநாதன் |

குறிப்பு:

★ மாணவர் எண்ணிக்கை வரையறுக்கப்பட்டுள்ளமையால் பதிவு செய்து உங்கள் அனுமதியை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.
★ கலை, வர்த்தகத்திற்கு தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழுவினால் கற்பிக்கப்படுகின்றது.
★ நேர அட்டவணையை காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளவும்.

### மீண்டும் ஒரு பிரிவு
### ஆரம்பம்:- 29 - 04 - 1995
காலை 8 00 மணி

— நிர்வாகி.

[சி-1027]

# கடற்புலிகளின் கூட்டம் மாமுனையில்

அன்னை பூபதியின் 7 ஆம் ஆண்டு இறுதிநாள் பொதுக் கூட்டம் இன்று இரவு 7-00 மணிக்கு மாமுனை அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை மைதானத்தில் கடற்புலிகளின் யாழ் மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. சிலம்பரசன் தலைமையில் நடைபெறும்.

இப் பொதுக் கூட்டத்தில் விடுதலைப்புலி உறுப்பினர்களின் உரையைத் தொடர்ந்து "சதியை வென்ற சாவுகள்" என்னும் நாடகமும் இடம் பெறும்.

இவ்வாறு விடுதலைப் புலிகளின் கடற்புலிகள் நடுவப் பணியகம் அறிவித்துள்ளது. [ஓ]

# ஓமந்தை வரை வாகன வசதி செய்து தரப்படும்

## பிரதி அமைச்சர் கூறுகிறார்

கொழும்பு, ஏப்.19

வவுனியாவில் தாண்டிக்குளம் முதல் ஓமந்தை வரையான பகுதிக்கு, பயணிகள் வாகனப் போக்குவரத்து ஏற்படுத்தப்படும் என மின்சக்தி எரிபொருள் பிரதி அமைச்சர் அத்துல நிமலசிறி ஜயசிங்க தெரிவித்தார்.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை தாண்டிக்குளம் சோதனை முகாமில் பயணிகள் படை அதிகாரிகள் மத்தியில் பிரதி அமைச்சர் உரை நிகழ்த்தினார்.

தாண்டிக்குளம் சோதனை முகாமில் மக்கள் எதிர் நோக்கும் துன்பங்கள் கஷ்டங்கள் விரைவில் தீரும் என தாம் எதிர்பார்ப்பதாகவும்—

சமாதானமே அரசின் முக்கிய நோக்கம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

வடபகுதி மக்களின் துன்பங்களைத் தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கைகள் அரசினால் தொடர்ந்தும் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (ஒ-14)

# 'விஜே'யின் கொலையை ஜே. வி. பி. செய்திருக்காது

## ஆணைக்குழு விசாரணையில் தகவல்

கொழும்பு, ஏப். 19

விஜயகுமாரதுங்க கொலையை ஜே.வி.பி. செய்திருக்க முடியாது மேற்படி கொலை ஒரு சதிச் செயலாக இருக்கலாம்.

இவ்வாறு நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்ட மேற்படி கொலை தொடர்பான ஜனாதிபதி ஆணைக் குழுவின் விசாரணையின் போது சட்டத்தரணி ரஞ்சித் அபேசூரிய தெரிவித்தார்.

கொலைச் சம்பவம் தொடர்பாக ஒப்புக் கொண்ட சந்தேக நபர் விசாரணைகளில் சாட்சியமளிப்பதற்கு முன்பாகவே சட்டமா அதிபரின் அனுமதி இன்றி விடுதலை செய்யப்பட்டுள்ளார் என்றும் அவர் தெரிவித்தார். (ஒ-14)

## ஜி. சீ. ஈ. சாதாரணதர பரீட்சை

# பெறுபேறுகள் மீளாய்வு: விண்ணப்ப முடிவு மே 5

கொழும்பு ஏப் 19

அண்மையில் வெளியான ஜி.சீ.ஈ. (சாதாரண) தரப் பரீட்சைப் பெறுபேறுகளை மீளாய்வு செய்வதற்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. விண்ணப்ப முடிவு திகதி மே 5 ஆம் திகதியாகும்.

விண்ணப்பபடிவங்கள் 30 x 20 சென்ரி மீற்றர் அளவில் விண்ணப்ப தாரிகளால் தயாரிக்கப்படல் வேண்டும். பெறுபேற்று அட்டவணையில் குறிப்பிடப்பட்ட சுட்டெண் நிலைய எண் பெற்ற தரம் என்பன சரியாக எழுதப்படல் வேண்டும்.

ஒரு பாடத்திற்கான மீளாய்வு கட்டணம் 60 ரூபாவாகும். ஒரு பாடத்திற்கு ஒரு விண்ணப்பப்படிவம் மட்டுமே சமர்ப்பிக்க வேண்டும். அதில் 60 ரூபா பெறுமதியான முத்திரை ஒட்டப்பட்டு விண்ணப்பதாரியின் ஒப்பமும், திகதியும் இட்டு செல்லுபடியற்றதாக்க வேண்டும்.

பாடசாலை பரீட்சார்த்திகள் உரிய பாடசாலை அதிபர் ஊடாகவும், தனிப்பட்ட பரீட்சார்த்திகள் பரீட்சைத் திணைக்களத்திற்கு நேரடியாகவும் விண்ணப்பங்களை அனுப்ப வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயரும் பாட எண்ணும் நிலைய எண்ணும் குறிப்பிடப்பட்டு பரீட்சை ஆணையாளர் நாயகம், மதிப்பீட்டுக் கிளை, இலங்கை பரீட்சைத் திணைக்களம், மலே வீதி, கொழும்பு - 2 என்னும் முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். (ஒ-4)

## 'ஆதாரம்' வெளியானது

யாழ்ப்பாணம், ஏப் 19

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரால் வெளியிடப்படும் சமூக பொருண்மியவிஞ்ஞான ஆய்வு இதழான ஆதாரம சஞ்சிகையின் 15 ஆவது இதழ் வெளிவந்துள்ளது.

தமிழீழ தேசியத் தலைவரின் பொருண்மியச் சிந்தனையைத் தாங்கி வெளிவந்துள்ள இந்த இதழில் மழைநீரைச் சேமிப்போம். யாழ். மாவட்டத்தில் விவசாய பீடைநாசினிகளின் தாக்கம்.

மற்றும் முக்கிய கட்டுரைகள், கவிதை போன்றனவும் ஏனைய வழமையான சுவையான அம்சங்களையும் தாங்கி வெளிவந்துள்ளது. (ஒ)

## பனம் வெல்லம் சந்தைப்படுத்த முடியாத நிலை

தென்மராட்சி, ஏப். 19

சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தினரால் இவ்வாண்டு உற்பத்தி செய்யப்பட்ட பனம் வெல்லத்தினை சந்தைப்படுத்த முடியாமல் உள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இவ்வாண்டு பதநீர் உற்பத்தி அதிகரித்ததையடுத்து வெல்ல உற்பத்தி ஆரம்பிக்கப்படாமை குறிப்பிடத்தக்கது. [ஒ-117]

## அறிவித்தல்

யாழ்/அரசினர் பொது வைத்தியசாலையில் வைத்தியர்களுக்குரிய உள்ளகப்பயிற்சி 26-04-95 இல் ஆரம்பிக்கப்பட இருப்பதாக கொழும்பு, சுகாதார அமைச்சு பணிப்பாளர் நாயகம் அவர்களால் அறிவிக்கப்பட்டுள்ளது. எனவே இவ்வைத்தியசாலையில் உள்ளகப்பயிற்சி மேற்கொள்வதற்கு விருப்பத்தை தெரிவித்த வைத்திய உத்தியோகத்தர்கள் உள்ளகப்பயிற்சி நெறியை தொடர்வதற்கான சில ஆயத்தங்களை செய்வதற்கு 20-04-95காலை 9-00மணிக்கு பணிப்பாளர் பணிமனையில் சமுகமளிக்கும்படி வேண்டுகிறேன்.

நன்றி

—பணிப்பாளர்—

(சி/1038)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
392/2 காலவர் வீதி
யாழ்ப்பாணம்

## ஏப்ரல் 19இன் முக்கியத்துவம்

இன்று ஏப்ரல் பத்தொன்பதாம் திகதி. ஈழத்தமிழர்களின் சுதந்திரப் போராட்ட வரலாற்றில் ஏப்ரல் பத்தொன்பதுக்கு இதுவரை அன்னை பூபதி தியாகச்சுடராக ஒளிர்ந்த முக்கியத்துவம் ஒன்றே இருந்தது. ஆனால் இம்முறை அதனோடு இன்னொரு முக்கியத்துவம் சேர்ந்து கொள்கிறது.

தமிழ் மக்களின் பிரச்சினையை சமாதான வழியில் தீர்ப்பதற்கு முன்வந்த சந்திரிகா அரசு, தமிழர்களின் முக்கிய அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்த்து வைத்து, வாக்குறுதிகளைச் செயற்படுத்திக் காட்டுவதற்கு தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் விதித்த இரண்டாவது காலக்கெடு ஏப்ரல் பத்தொன்பதாம் திகதி (இன்று) முடிவடைவதே, புதிய — இரண்டாவது — முக்கியத்துவமாக அமைகிறது.

இந்திய இராணுவம் விடுதலைப் புலிகளுடன் போர் புரிந்துகொண்டிருந்த வேளையில், அந்தப் போரை நிறுத்துமாறும், விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தை நடத்தி சமரசத்துக்கு வந்து தீர்வு ஒன்றைக் காணுமாறும் கோரியே அன்னை பூபதி 1988ஆம் ஆண்டு விடுதலைத் தீயில் தன்னை ஆகுதி ஆக்கிக் கொண்டார்.

அகிம்சையை உரிமைப் போராட்ட ஆயுதமாக அறிமுகப்படுத்திய மகாத்மா காந்தி பிறந்த தேசத்தவர், அன்னை பூபதியின் போராட்டத்துக்கு மதிப்பளிக்கவில்லை. அவரது அகிம்சையை கொச்சைப்படுத்த முனைந்து தோற்றனரே அன்றி அதன் மகத்துவத்தை நிலைநாட்ட முயலவில்லை.

தமிழர்கள் தங்கள் விடுதலைக்காக ஆயுதம் ஏந்திப் போராடினாலும் அகிம்சை ஆயுதத்தையும் கைக்கொள்ளப் பின்னிற்கவில்லை என்பதனை தியாகி திலீபனும், அன்னை பூபதியும் உலகத்துக்கு உணர்த்தினார்கள்.

தமிழர்கள் சமாதானத்தையும் அமைதியையுமே விரும்புபவர்கள். ஆனால் தங்கள் விடுதலைக்காக தங்கள் உயிரையும் ஈந்து போராடுவதற்கும் தயங்கமாட்டார்கள். இதனை அனைத்து உலகமும் இப்போது நன்கு அறிந்துள்ளது.

அதனை மேலும் உறுதிப்படுத்துவது போல, நாலரை வருடக் கடும் போரின் பின்னரும், போர்க்களத்தில் பல சாதனைகளையும், வெற்றிகளையும் ஈட்டிய பின்னரும் விடுதலைப் புலிகள் சமாதானப் பேச்சுக்கு இணங்கி நான்கு கட்டப்பேச்சுக்களும் முடிந்துவிட்டன.

ஆனால் சமாதானப் பேச்சுவார்த்தைக்குவந்த சந்திரிகா அரசு, வெறும் வாக்குறுதிகளோடும், சொல்லோடும் நின்றுகொண்டு, தமிழர்களின் அன்றாடப் பிரச்சினைகள் தீர்க்கப்படுவதாக பிரசாரம் செய்வதிலேயே கவனம் செலுத்துகிறது. அரசியல் தீர்வுகாண முனையும் அரசு அதற்கு முற்றிலும் முரணாக இராணுவ நலன்களை விட்டுக்கொடுக்க மறுக்கிறது.

அது மட்டுமன்றி, கிழக்கில் மீண்டும் போர் நடத்துவதற்கான ஆயத்தங்களை அரசு செய்து வருகிறது. மோதல் தவிர்ப்பு ஒப்பந்தத்தை மீறுகிறது. மக்களுக்கு வேண்டாத நெருக்குதல்களைக் கொடுக்கிறது.

அரசின் இந்த இரட்டை வேடத்தை அம்பலமாக்குவதற்கு தலைவர் பிரபாகரன் விதித்த காலக்கெடு சிறந்த கருவி எனலாம். அரசின் சமாதானம் என்ற போலி முகத்திரையை கிழித்தெறிய தக்க தருணமாகவும் இது விளங்குகிறது.

அமைதிப்படை என்ற கவர்ச்சியான பெயரில் தனது சொந்த நலனைக் காக்க வந்த இந்தியாவின் முகத்திரையை கிழித்து உண்மைத் தோற்றத்தை உலகுக்குக் காட்டிய நாள் ஏப்ரல் பத்தொன்பது.

அதே போல, சந்திரிகா அரசின் இரட்டை வேடத்தையும், சமாதானத்தைக் காண்பதில் உள்ள அதன் இயலாமையையும் எடுத்துக் காட்டுவதாகவும் ஏப்ரல் பத்தொன்பது மாறும் சாத்தியம் உண்டு.

# ஈழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் தனிச் சரித்திரமான தியாகி அன்னைபூபதி

'அமைதிப் படை' என்ற போர்வையில் ஈழத்தமிழரின் விடுதலைப் போரை நசுக்கி விடுவதற்கு வந்த இந்தியப் படையினரின் சதித்திட்டத்திற்கு எதிராகவும் —

தமிழ் மக்கள் மீது காலங்காலமாக இழைக்கப்பட்டு வரும் அடக்கு முறைகளுக்கு எதிராகவும் கிளர்ந்தெழுந்து —

தமிழீழத்தின் உரிமைக்காக அஹிம்சைப் போர் புரிந்து, அதற்காகவே தனது இன்னுயிர் துறந்த தற்கொடையாளி அன்னை பூபதியின் 7 ஆம் ஆண்டு நினைவு தினம் இன்றாகும்.

1988 ஆம் ஆண்டு.

அது இந்திய வல்லரசு தனது ஆதிக்கத்தை நமது மண்ணிலும் நிலை நாட்ட பகிரதப் பிரயத்தனம் செய்து கொண்டிருந்த வேளை.

தமிழ் மக்களை, பால் வயது வேறுபாடுகள் எவற்றையும் பாராது கொன்று குவித்துக் கொண்டிருந்தது இந்திய இராணுவம். வீதியெங்கும் பிணவாடை! மக்கள் மனங்களில் ஏக்கச் சுமை.

இலங்கை இராணுவம் அது காலவரை செய்த அட்டூழியங்கள் எல்லாவற்றினையும் விழுங்கி ஏப்பம் விட்டது இந்திய இராணுவத்தினரின் அடாவடித்தனங்கள்.

இத்தகைய அடக்குமுறைகளுக்கு எதிராக, அட்டூழியங்களுக்கு எதிராக சாதாரண மக்கள் எவருமே குரல் எழுப்பத் துணிவில்லாமல் தமக்குள் முடங்கிக் கிடந்தனர்.

அவர்களது மன ஓர்மங்கள், குரல்வளையை விட்டு வெளிவரத் துணிவின்றி பீதி சூழ்ந்திருந்த காலம்.

அந்த நிலையில் தான் நமது அன்னை, பூபதி இந்திய ஏகாதிபத்திய சக்திகளுக்கு எதிராகப் போராடத் துணிந்தார்.

**இரண்டு கோரிக்கைகள்**

★ தமிழ் மக்கள் மீது தொடுத்துள்ள இந்திய இராணுவத்தினரின் யுத்தம் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

★ விடுதலைப் புலிகளுடன் உடனடியாகப் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும். என்னும் இரண்டு கோரிக்கைகளை முன்வைத்து அவர் தனது சத்தியப் போராட்டத்தைத் தொடக்கினார்.

தனது 58ஆவது வயதில் நடத்திய இந்தப் போராட்டம், அவரது மன உறுதிக்கும், தமிழ் மக்கள் மீதும், மண் மீதும் அவர் கொண்ட ஈடிணையற்ற பற்றுக்கும் சான்று பகர்ந்தது.

தமிழ் மக்களை அச்சுறுத்துவதனால் அவர்களது போராட்டத்தை மழுங்கடித்து விடலாம் என்று கனவு கண்ட இந்தியப் படையினர் அன்னையின் உண்ணாவிரதப் போராட்டத்தையும், அதனால் தமிழ் மக்களிடையே ஏற்பட்ட உணர்வுக் கொந்தளிப்புக்களையும் கண்டு திகைப்புற்றது.

எப்படியாவது, அன்னையின் போராட்டத்தை நிறுத்தி விடுவது என்று கங்கணம் கட்டிக்கொண்டு செயற்படத் தொடங்கியது.



தியாகதீபம் அன்னைபூபதி

**அன்னைக்கு மிரட்டல்**

அன்னையின் உண்ணா நோன்பை குழப்புவதற்காக, பல மிரட்டல் வேலைகளைச் செய்தது. பல தந்திரங்களை மேற்கொண்டது

எனினும் இந்திய ஏகாதிபத்தியத்துக்கும் எதிர்ச் சக்திகளுக்கும் பணியாது. நிமிர்ந்து நின்றார் அன்னை பூபதி.

தளராத துணிவுடன், தன் கொள்கைகளைக் கைவிடாது, தான் மேற்கொண்ட புனித பயணத்தைத் தொடர்ந்தார்.

மட்டக்களப்பு மாமாங்கப் பிள்ளையார் கோயில் முன்றிலில் 32 நாள்கள் உண்ணா நோன்பு இருந்த அன்னை பூபதி, 1988 ஏப்ரல் திங்கள் இதே நாள், தனது இலட்சிய வேள்விக்கு தன்னையே ஆகுதி ஆக்கி தியாக தீபமானார்.

அன்னை தியாக தீபமானதும், அமுங்கிக் கிடந்த தமிழ் மக்களின் உணர்வலைகள், பொங்கி எழுந்தன.

**தேசிய எழுச்சி**

இந்திய இராணுவ ஆக்கிரமிப்புகளுக்கு எதிரான கருத்துகளும், செயல்களும், ஆர்ப்பாட்டங்களும், பேரணிகளும் புது உத்வேகம் பெற்றன. மொத்தத்தில் அன்னையின் தற்கொடை தமிழ் தேசிய எழுச்சிக்கு உந்து சக்தியாயிற்று.

அன்னை பூபதியின் பூதவுடலை உடனடியாக அப்புறப்படுத்த இந்தியப் படையினர் எடுத்த முயற்சிகள், கொதித்தெழுந்த மக்களால் முறியடிக்கப்பட்டன.

இந்த எழுச்சியே, நமது மண்ணை விட்டு, இந்தியப் படையினரை வெளியேற்றுவதற்கான உந்து சக்தியாகப் பரிணமித்தது.

திரண்டெழுந்த மக்கள் சக்தி, ஈழ விடுதலைப் போராட்டத்திற்கு மேலும் பலத்தை அளித்தது.

இறுதியில் இந்தியப்படை எமது மண்ணில் வரலாற்றுத் தோல்வியைச் சந்தித்தது.

இன்று எமது மண்ணின் விடுதலைப் போராட்டம் பல்வேறு பரிமாணங்களினூடாக வளர்ந்து வருகிறது. ஆண்களுக்குச் சமமாக பெண்களும் ஆயுதம் ஏந்தி பல்வேறு சாதனைகளை நிலைநாட்டி வருகின்றனர்.

ஆயுதப் போராட்டங்களும் அஹிம்சைப் போராட்டங்களும் எமது விடுதலைப் போரை முன்னெடுத்துச் செல்லுகின்றன.

இந்த வகையில், எமது மண், எமது மக்கள், எமது இனம் என்ற பரந்த அடிப்படையில் அன்னை பூபதி நடத்திய போராட்டம் எமது போராட்ட வரலாற்றில் அழியாத தனிச் சரித்திரம்.

விடுதலை இலட்சியத்துக்காக உண்ணாவிரதம் இருந்து உயிர்த் தியாகம் செய்த முதற் பெண் என்ற பெருமையையும் சூடிக் கொண்டார் அன்னை பூபதி.

எமது இனமும், மண்ணும் சுதந்திரக் காற்றைச் சுவாசிக்க, தொடுக்கப்பட்டுள்ள புனிதப் போரில் பங்கேற்க நாம் அனைவரும் அணிதிரள வேண்டும் என்பதை அன்னையின் நினைவு நாளான இன்று நினைவில் கொள்வோமாக.

### பூபதித் தாயவளின் புகழ்பாடு

ராகம்:- சிந்துபைரவி தாளம்:- ஆதி

பல்லவி

பூபதித் தாயவளின் புகழ்பாடு — தியாகி
பூபதித் தாயவளின் புகழோது — என்றும்
— (பூபதி ......)

அனுபல்லவி

தென்தமிழ் ஈழத்தில் அவதரித்தாள் — எம்
செந்தமிழ் நலம்காக்க அவதரித்தாள் — அன்னை
— (பூபதி ......)

சரணம்

காந்தியின் வழிநடந்து குரல் கொடுத்தாள் — இனச்
சாந்தியைக் கொடு என்று குரல் கொடுத்தாள்
— இதைக்
காந்தியின் பெயர்சொல்வோர் பழித்துரைத்தார்
— அந்தக்
காந்தியும் துதி செய்யும் நிலையடைந்தாள் — அம்மா
— (பூபதி ......)

— முருகு

### சுதந்திரத்தை உறுதி செய்யும் தியாகி ஆகினாள்!

தியாகமொரு பெண்மையாக உருவெடுத்தது — அது
தமிழர்களின் துயரங்கண்டு உளங்கொதித்தது
இந்தியரின் கொடுமை கண்டு துடிதுடித்தது — தன்
இன்னுயிரை ஈந்து அவர் முகங்கிழித்தது.
அமைதிகாக்க வந்த படை கொலைபுரிந்தது — இங்கு
அலைந்த மக்கள் உடல் நெரித்து பெருமை
கொண்டது
இமய மன்னர் காக்குமன்னை நெஞ்சு வெடித்தது
— அது
இரும்பு போன்று கடினமாகி தன்னை அழித்தது.
தமிழினத்தின் அன்னையாக உருவெடுத்தாள்
— அவள்
தவித்து நின்ற தமிழர்களைக் காக்கவெண்ணினாள்
சுய நலத்தின் வேரறுத்து பற்றை நீக்கினாள் — எங்கள்
சுதந்திரத்தை உறுதி செய்யத் தியாகி ஆகினாள்.

— "மாரீசன்"

### நாம பெற்ற பூபதித தாய்

மட்டு நகர்ப் பெட்டகமாய் நீ உதித்தாய் - ஈழ
மக்களது நெஞ்சங்களில் நீ நிலைத்தாய்
எட்டி உதைத் தவர்முன்னால் நீ சிரித்தாய் — எங்கள்
இன்னல்களை நீக்கிடவே நீ மரித்தாய்
அகிம்சையெனும் ஆயுதத்தை நீ எடுத்தாய்
அறவழியில் அறிவுரைகள் நீ கொடுத்தாய்
பகை தொடுத்த வல்லரசை நீ எதிர்த்தாய் — எங்கள்
மானத்தைக் காப்பதற்காய் நீ துடித்தாய்
அகிம்சையதே வெல்லு மென்று நீ உரைத்தாய்
இங்கே
அஞ்சாமைப் பயிர்தன்னை நீ வளர்த்தாய்
தகைசான்ற "தியாக தீபம்" பேர் பதித்தாய் — நீ
தவப்பயனாய் நாம் பெற்ற பூபதித்தாய்

—அவ்வாயூர் செல்லையா
விவேகானந்தன்

### வெற்றி முரசுக்கு வாழ்த்திடு

கிழக்கில் மலர்ந்த பூபதியம்மா
ஈழத்தவர் நெஞ்சங்களில் நீயமர்ந்து
ஆண்டு ஏழாகி நிற்கிறது
ஏழாகி நிற்கையிலும்
உனது மண்ணில் இன்னும் கெடுபிடிகள்
ஆனால் வடதமிழீழ மண்ணிலோ
எத்தனை வளர்ச்சிகள்
எண்ணற்ற கண்டு பிடிப்புகள்
அழுவதை நிறுத்தி விட்டு
ஓடியோடி உழைத்ததனால்
வாழத் தெரிந்து கொண்ட
ஈழத்தவரோடு எரிகின்ற
எதிராளிகளே கரம்
கோர்த்தும் நிற்கின்றார்
தருவோ மென்று கொண்டே
தப்புத் தாளம் போடுகின்றார்
கரம் கோர்த்துக் கொண்டே
கருவிகளையும் தூக்குவோ மென்பவரோடு
எச்சரிக்கையோடு அளவளாவியே......
அச்சமின்றி எதிரி முன் நின்ற அன்னையே!
எது வென்றாலும் ........
வாழ்த்திடு; வணங்குகின்றோம்
வெற்றி முரசமே! மண்ணில்
ஒலிக்க வேண்டு மென்று!

— மீசாலையூர் கமலா,

# தமிழர் விவகாரத்தில் தலையிடும் உரிமையை இந்தியா இழந்துள்ளது

## 'நியூ ஸ்டேற்ஸ்மன்' கருத்து

இலங்கைத் தமிழர் விவகாரத்தில் இந்தியா ஊசலாட்டமான நிலைப் பாட்டையே தொடர்ந்து கடைப்பிடித்து வந்திருக்கிறது. இதனால் இந்த விஷயத்தில் தலையிடும் உரிமையை இந்தியா இழந்துள்ளது.

இந்தியாவில் இருந்து வெளிவரும் "நியூ ஸ்டேற்ஸ்மன்" பத்திரிகை கட்டுரை ஒன்றில் இந்தக் கருத்து வெளியாகியுள்ளது.

சமாதானமா, நாடு கடத்தலா? என்ற கேள்வி இலங்கையின் இனப்பிரச்சினையில் பூதாகாரமாக வெளிப்படும் எனும் தொனியில் அந்தக் கட்டுரை அமைந்துள்ளது.

கட்டுரையின் முக்கிய அம்சங்கள் வருமாறு:-

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை நாடு கடத்த வேண்டும் என்று இந்தியா கோரினால் ஸ்ரீலங்கா அரசாங்கத்துக்கு அது பெரிய தலையிடியாக அமையும்.

பிரபாகரனை நாடு கடத்த வேண்டும் என்ற கோரிக்கை இன்றைய நிலைமையில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தமக்கு இரண்டு தடவை கிடைத்த மக்கள் ஆணையின்படி மேற்கொண்டுள்ள சமாதான நடவடிக்கைக்கு ஒரு தடையாக அமையும்.

இன்னொரு நாட்டுக்கு அவரைப் பிடித்துக் கொடுப்போம் என்று சொல்லிக் கொண்டு பிரபாகரனுடன் சந்திரிகா சமாதானப் பேச்சுவார்த்தை நடத்த முடியாது.

நாடு கடத்தப்பட வேண்டும் என்று பிரதமர் நரசிம்மராவ் கட்சியில் சிலர் கூறுகின்றார்கள். பிரதமர் இதற்கு மசியக்கூடாது. இந்தக் கோரிக்கை சமாதான நடவடிக்கை ஆரம்பித்த பின்னரே எழுந்தது.

சமாதான நடவடிக்கை எந்த விளைவையும் தராமல் போகலாம். பிரபாகரனை நம்பமுடியாமல் இருக்கலாம். ஆனால்; இந்த முடிவை ஸ்ரீலங்காத் தலைவர்கள் தான் செய்ய வேண்டும்.

கோட்பாடு ஒருபுறம் இருக்கட்டும். பிரபாகரனுடன் பேச்சுவார்த்தை நடத்துவதில் இந்தியா ஊசலாட்டமான நிலைப்பாட்டையே கடைப்பிடித்து வந்திருக்கிறது. இதனால் இந்த விஷயத்தில் தலையிடும் உரிமையை இழந்துள்ளது.

இந்திய வெளிவிவகார அமைச்சின் வருடாந்த அறிக்கைகள் தன்னலம் சுற்றியனவாகவே அமைந்துள்ளன.

1990 – 1991 அறிக்கை கூறுகின்றது: "தமிழர்களின் நியாயமான கோரிக்கைகளையும் அபிலாஷைகளையும் கணக்கில் எடுக்கும் அரசியல் பேச்சுவார்த்தைத் தீர்வு மூலமே இனப் பிரச்சினைக்கு நிரந்தர சமாதானம் ஏற்பட முடியும் என்று இந்திய அரசாங்கம் நம்புகிறது.

இந்த அரசியல் தீர்வு அரசாங்கத்துக்கும் ஸ்ரீலங்கா தமிழர்களுக்கும் இடையில் ஏற்பட வேண்டும். மோதல்களை நிறுத்தி பேச்சுவார்த்தையைத் தொடங்க வேண்டும்" என்று இந்தியா கூறியுள்ளது.

இது ராஜீவ்காந்தி படுகொலைக்கு முந்திய அறிக்கை பின் நிலைப்பாடு மாறியது. 1991—1992 அறிக்கை பின்வருமாறு கூறுகிறது.

"எதிர்காலப் பேச்சுவார்த்தைகளில் சகல தமிழ்க் குழுக்களும், குறிப்பாக வன்முறையைக் கைவிட்டு பிரதான நீரோட்டத்தில் கலந்து கொண்டுள்ள குழுக்கள் பங்கு பற்ற வேண்டும்" —என்றும்—

1992 — 1993 அறிக்கையில் "வன்முறைகளைக் கைவிட்ட சகல தரப்புகளும் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ள வேண்டும்" என்றும் குறிப்பிடப்பட்டது.

இந்த மாற்றம் திட்டமிட்டு செய்யப்பட்டது. 1993–1994 அறிக்கை இன்னும் தெளிவாக இதையே பின்வருமாறு கூறுகின்றது.

"எவருடன் பேச்சுவார்த்தை நடத்துவது என்பதைக் கொழும்பே தீர்மானிக்க வேண்டும். தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவது "உங்கள் படையினரைச் சுடுபவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவதாகும்" என்று டிமேல் எறிக்றுவோ என்ற படைத் தளபதிக்கு கூறியே புத்திமதி போலாகும் என்பதாகும். ஒருங்கக் கூறின், ஸ்ரீலங்கா அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் சமாதான ஒப்பந்தம் ஒன்று நிறைவேற்றப்படாவிட்டால் நாடுகடத்தல் நடைமுறை ரீதியில் செய்ய முடியாத ஒன்றாகும். சமாதான ஒப்பந்தம் நிறைவேறினால் சட்டரீதியாக அதைச் செய்யமுடியாது.

இந்தியாவின் நாடு கடத்தல் கோரிக்கையை இலங்கை ஏற்றுக் கொண்டால்.

[இது அசாத்தியம்] இலங்கை நீதிமன்றங்களில் எண்பதாம் ஆண்டுகளின் இந்திய அழுக்குத் துணிகள் அலசப்படும்

ராஜீவ் காந்தி பயங்கரவாதம் பற்றிய சார்க் நகலை ஒட்டி 1986இல் 'இலஸ்றேற்றட் வீக்லி ஒவ் இந்தியா'' வுக்கு அளித்த பேட்டி இந்தியாவின் இரண்டும் கெட்டான் நிலைமையைப் பிரதிபலிக்கிறது.

"அது வரைவிலக்கணப் பிரச்சினை. பயங்கரவாதம் எப்பொழுது விடுதலை இயக்கம் ஆகின்றது. பயங்கரவாதமும் மனித உரிமைகளும் முரண்படும் நிலைமை எவ்வாறு ஏற்படுகிறது? இவை தெளிவற்ற விஷயங்களாகும்" என்று அவர் கூறினார்.

ஆகவே சமாதான நடவடிக்கையை ஆதரிப்பதே இந்தியாவின் முன்னால் உள்ள மிகச் சிறந்த பாதையாகும்.

(ஒ-க)

# தமிழருக்கு எல்லாம் கிட்டி விட்டது 'ஈழம்' மாத்திரமே எஞ்சியுள்ளது

## பௌத்த பிக்கு குமுறுகிறார்

தமிழ் மக்களின் கோரிக்கைகளில் நூற்றுக்கு தொண்ணூற்றொன்பதும் வழங்கப்பட்டுள்ளன. இதைப் புதிய அரசு ஏற்றுக்கொண்டாலும் ஏற்றுக் கொள்ளாவிடினும் இதுவே உண்மை. இன்னும் வழங்கப்படாமல் எஞ்சியிருப்பது ஈழம் மாத்திரமே.

இன்று சிங்களவர்களுக்கு வடபகுதிக்குச் செல்ல முடியாது. புலிகள் அங்கு தனி அரசை நிறுவியுள்ளார்கள். அரச சமாதானக் குழுவுக்கு செஞ்சிலுவைச் சங்க சர்வதேச குழுவின் உதவியின்றி வடபகுதிக்குச் செல்ல முடியாத சூழ்நிலை உருவாகியுள்ளது.

—இவ்வாறு "திரிசிங்கலே" என்னும் சிங்கள வார இதழுக்கு அளித்த பேட்டியில் கந்துபொட அமரஞான தேரோ தெரிவித்துள்ளார்.

அவர் தனது பேட்டியில்: மேலும் கூறியுள்ளதாவது:—

17 ஆண்டுகளாக உள்ள பிரச்சினைக்குத் திடீரெனத் தீர்வினைக் காண்பது கடினம். புலிகள் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் [illegible] கோரிக்கை [illegible] கிறார்கள். இணக்கம் காணப்பட்ட முடிவுகளை மாற்றுகிறார்கள்.

சமாதானப் பேச்சிற்கான திகதியைத் தீர்மானிக்க முடியாதளவுக்கு நிலைமை மிக மோசமாக உள்ளது. இப் பிரச்சினைக்கு எவ்வகையான முடிவாயினும் அதை உடன் காணவேண்டும். அவ்வாறு காணாதுவிடின் சிங்கள மக்களுக்கு இலங்கையின் வட பகுதி உரிமையற்ற ஒன்றாகி விடும்.

எதிர்காலத்தில் முஸ்லிம் மக்களால் இலங்கைக்கு மாத்திரமல்ல [illegible] எனவும் அவர் தனது பேட்டியில் குறிப்பிட்டுள்ளார்.

[ஒ10]

### தேசிய ஆங்கில சான்றிதழ் பரீட்சை

யாழ்ப்பாணம், ஏப். 19

தேசிய ஆங்கில சான்றிதழ் பகுதி 1க்கான எழுத்துப் பரீட்சை எதிர்வரும் ஜூன் மாதம் 24ஆம் திகதி போதிய பரீட்சார்த்திகள் இருப்பின் யாழ்ப்பாணத்தில் அமையும் நிலையத்திலும் நடைபெறும் என்று பரீட்சை ஆணையாளர் நாயகம் அறிவித்துள்ளார்.

இதுசம்பந்தமான விவரங்களை யாழ். வலயம் ஒன்று கல்வித் திணைக்களத்தில் பார்வையிடலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பப் படிவங்களை எதிர்வரும் 20ஆம் திகதி காலை 11 00 மணிக்கு முன் திணைக்களத்தில் கையளித்தால் இவற்றைப் பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

[ஒ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிரு ரியுசன் சென்ரர்

ஸ்ரேசன் றோட், கோண்டாவில்

**A/L 97**

யாழ் முன்னணி ஆசிரியர்களின் ஒருங்கிணைந்த சேவை கலை, வர்த்தக வகுப்புக்கள்

ஆரம்பம்: 21 - 04 - 95 வெள்ளி 2 மணி

| | | |
|---|---|---|
| பொருளியல் | — | திரு. உதயன் |
| கணக்கியல் | — | திரு ஸ்ரீ |
| வர்த்தகம் | — | பிரபல ஆசிரியர் |
| அளவையியல் | — | திரு S S மனோகரன் |
| இந்துநாகரிகம் இந்துசமயம் | — | திரு சோதி |
| புவியியல் | — | திரு வேலா |
| தமிழ் | — | திரு குழந்தை |
| அரசியல் | — | திரு சிவனேசன் |
| வரலாறு | — | திரு. பிள்ளை. |
| நாடகமும் அரங்கும் | — | திரு. சத்தியா |

★ அனுமதிகளை முற்கூட்டியே பதிவு செய்யவும்.

(சி/984)

# யாழ். மாணவர் போராட்டத்துக்கு கனேடிய தமிழ் அமைப்பு ஆதரவு

யாழ்ப்பாணம், ஏப். 19

யாழ். மாவட்டத்தில் பல்கலைக்கழக அனுமதியால் பாதிக்கப்பட்ட மாணவர்களின் போராட்டத்துக்கு முழு ஆதரவு வழங்க கனடாவில் உள்ள தமிழ் மாணவர் கல்விக் களஞ்சியம் அமைப்பு முன்வந்துள்ளது.

தமிழ் மாணவர்களின் பல்கலைக்கழக அனுமதியில் மேற்கொள்ளப்பட்டுள்ள அநீதியை சர்வதேச மயமாக்க தேவையான நடவடிக்கைகளை எடுக்க அந்த அமைப்பு முன்வந்துள்ளது.

தமிழ் மாணவர்களின் போராட்டத்துக்கு பங்களிப்பை வழங்கும் நோக்குடன் அந்த அமைப்பு நிதி உதவியும் வழங்கியுள்ளது.

# தமிழருக்கு இரு பல்கலைக் கழகங்கள்; முஸ்லிம்களுக்கு என ஒன்று கூடாதா?

கொழும்பு, ஏப். 19

12 சதவீதமாகவுள்ள தமிழர்களுக்கு இரண்டு பல்கலைக்கழகங்கள் இருக்க முடியுமானால், 8 சதவீதமாகவுள்ள முஸ்லிம் மக்களுக்கு, அம்பாறை மாவட்டத்தில் ஏன் ஒரு பல்கலைக் கழகம் அமைய முடியாது.

— இவ்வாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் மாணவர் சம்மேளனப் பட்டதாரி மாணவர் ஒன்றியம் ஏற்பாடு செய்து நடத்திய கருத்தரங்கு ஒன்றில் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

'கிழக்கு மாகாண பல்கலைக் கழகமும், முஸ்லிம் பட்டதாரிகளும்' என்ற தலைப்பில் இக் கருத்தரங்கு நடைபெற்றது.

கிழக்கு பல்கலைக்கழகமானது சட்டத்தில் கூறப்பட்டவாறு மட்டக்களப்பு மாநகர எல்லைக்குள் அமைக்கப்பட்டு அதன் பீடங்கள் அம்பாறை, திருகோணமலை ஆகிய பிரதேசங்களுக்கு மூவின மக்கள் பயிலக் கூடிய வகையில் விரிவுபடுத்த வேண்டும் என்றும் அந்தக் கருத்தரங்கில் வலியுறுத்தப்பட்டது. [அ-3-5]

# முதியோருக்கான விசேட நலவாழ்வுத் திட்டம்

கொழும்பு, ஏப். 19

முதியோருக்கான விசேட நலவாழ்வுத் திட்டம் ஒன்று வகுக்கப்பட்டுள்ளது 'நவோதயா' என்றழைக்கப்படும் இத்திட்டம் நாடளாவிய ரீதியில் அமுல் செய்யப்படும்.

விசேட சமூகசேவைகள் அமைச்சினால் அமுல் செய்யப்படவுள்ள இத்திட்டம் ஆதரவற்ற முதியோர்களுக்கு உதவியளிப்பதாக அமையும்.

ஜப்பானின் நிதியுதவியுடன் மேற்கொள்ளப்படவுள்ள இந்தத் திட்டம் எதிர்வரும் இரண்டு மாதங்களினுள் அமுல் செய்யப்படும்.

இத்திட்டத்தின் கீழ் முதியோர் நலவாழ்வு இல்லங்கள் ஆரம்பிக்கப்படுவதுடன்— முதியோர், பல்வேறு சுயதொழில்களிலும் ஈடுபடுத்தப்படுவர். [ஒ-14]

# அன்னை பூபதி....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நினைவுக் கூட்டங்கள் இடம் பெறும்.

மூன்று கோட்டங்களிலும் உண்ணாவிரதத்தில் சகல துறைகளைச் சேர்ந்தவர்களும் கலந்துகொள்வர் அந்தந்தப் பகுதி மக்கள் மட்டுமன்றி அரசாங்க ஊழியர்கள், தனியார்துறை ஊழியர்கள், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் பணிபுரிவோர், மாணவர்கள், தொண்டர் அமைப்புகள், சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள் என்று ஏராளமானோர் உண்ணாவிரதம் அனுஷ்டிப்பர்.

வலிகாமம் கோட்டத்துக்குரிய உண்ணாவிரதமும் நினைவுக்கூட்டமும் நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்திலும்—

தென்மராட்சிக் கோட்டத்துக்குரிய உண்ணாவிரத நிகழ்வும், நினைவுக் கூட்டமும் சுட்டிபுரம் அம்மன் கோயில் முன்றிலிலும்—

வடமராட்சிக் கோட்டத்துக்குரிய அன்னை பூபதி நினைவு நிகழ்வுகள் அல்வாய் மாலி சந்தி பிள்ளையார் கோவில் முன்றிலிலும்— நடைபெறும்.

அன்னை பூபதிக்கு அஞ்சலி செலுத்துமுகமாக, நினைவுப் பந்தல்களும் குடில்களும் ஒரு மாதத்துக்கு முன்னரே அமைக்கப்பட்டன.

அங்கு அன்னை பூபதியின் திருவுருவப்படம் வைக்கப்பட்டு தீ ஏற்றியும் மலர் அஞ்சலி செய்தும் மக்கள் அவரை நினைவு கூர்ந்தனர்.

கடந்த மூன்று தினங்களாக வட்ட மட்டத்தில் பெரிய அளவில் நினைவு தினம் வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

இன்றைய நினைவு நிகழ்வுகளில் பெரும் எண்ணிக்கையான மக்கள் உணர்வு பூர்வமாகக் கலந்து கொள்வர். (அ)

# தென்மராட்சிப் பகுதிகளில் கோஷ்டி மோதல்கள்

தென்மராட்சி, ஏப். 19

தென்மராட்சிப் பகுதியில் பலகாலமாக ஒய்ந்திருந்த கோஷ்டி மோதல்கள் மீண்டும் ஆரம்பித்துள்ளன.

புது வருடத்தின் பின்னர், மந்துவில், கெற்பலி, மறவன்புலோ ஆகிய பகுதிகளில் இடம் பெற்ற கோஷ்டி மோதல்களும் பளை, கொடிகாமம் ஆகிய இடங்களில் இடம் பெற்ற மோதல்களிலும் சுமார் பத்துப்பேர் பலத்த காயங்களுக்கு உள்ளாகி ஆஸ்பத்திரிகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இம்மோதல்கள் தொடர்பாக சாவகச்சேரி காவல் துறையினர் பலரைக் கைது செய்துள்ளனர்.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை கைதடி மறவன்புலோவில் இடம் பெற்ற மோதலில் காங்கேசு ஆழ்வாப்பிள்ளை (வயது 33) சுப்பிரமணியம் நகுலராசா [வயது 26] ஆகியோரும் கொடிகாமம் கெற்பலியில் இடம் பெற்றமோதலில் கே. கணேசலிங்கம் [வயது 42] கொடிகாமத்தைச் சேர்ந்த வல்லிபுரம் சுந்தரகுமார் [வயது 20] ஆகியோரும் காயமடைந்து சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

புத்தாண்டு தினத்தன்று கொடிகாமம் மந்துவில் பகுதியில் இடம் பெற்ற கோஷ்டி மோதலில் பெண் ஒருவர் உட்பட நால்வர் காயமடைந்து ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. [சு-117]

# பீரிஸ் வாஷிங்டனுக்கு

கொழும்பு, ஏப் 19

நீதி, அரசமைப்பு இனவிவகார அமைச்சரும் பிரதி நிதி அமைச்சருமான ஜீ. எல் பீரிஸ் சர்வதேச நாணய நிதியத்தினதும் உலக வங்கியினதும் மாநாடுகளில் கலந்துகொள்வதற்காக நேற்று வாஷிங்டன் புறப்பட்டுச் சென்றார். (உ-14)

# சிறுமி மரணம்

யாழ்ப்பாணம், ஏப் 19

செப்ரிசீமியாவின் தாக்கத்திற்குள்ளாகி யாழ் ஆஸ்பத்திரியில் நேற்றும் ஒரு சிறுமி உயிரிழந்தார்.

சரசாலை வடக்கைச் சேர்ந்த பவானந்தராசா சிந்துஜா (வயது 9) என்ற சிறுமியே மரணமானவராவார். (உ-15)

# இலங்கை-இந்திய---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கும் வாழ்க்கைப் பிரச்சினைகள், கஷ்டங்கள் குறித்து விரிவாக இங்கு ஆராயப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது

தமிழ் மக்களின் கஷ்டங்களைப் போக்குவதற்காக—

இலங்கை அரசாங்கமும், விடுதலைப் புலிகளும் இடர்கள், முட்டுக்கட்டைகள் தோன்றினாலும் பேச்சு வார்த்தையை கைவிட்டுவிடாது முன் எடுத்துச்செல்ல வேண்டும் என்று அங்கு வலியுறுத்தப்பட்டதாகவும் கூறப்பட்டது.

இது தொடர்பாக இந்தப் புத்திஜீவிகள் குழு விடுதலைப் புலிகள் தலைவர் திரு. வே. பிரபாகரனுக்கும், இலங்கை ஜனாதிபதிக்கும் நீண்ட கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது (உ-3)

# 13 இலங்கை---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

விக்க நடவடிக்கை எடுக்குமாறு கோரியும்—

நீர்கொழும்புப் பகுதியைச் சேர்ந்த சுமார் மூவாயிரம் மீனவர்கள் கடந்த வாரம் கடற்றொழிலுக்குச் செல்லாமல் பகிஷ்கரிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (உ-3)

# செஞ்சிலுவை...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

12 ஆம் திகதிய தமது கடிதத்தில் ஜனாதிபதி சந்திரிகா, தலைவர் பிரபாகரனுக்கு அறிவித்திருந்த போதிலும், நேற்று மாலை வரை அது பற்றிய வர்த்தமானி அறிவித்தல் வெளியாகியது குறித்து எந்தச் செய்தியும் கிடைக்கவில்லை. (உ-3)

# ரூ. 200 கோடி நிலுவை

கொழும்பு, ஏப். 19

தென்பகுதியிலுள்ள தொலைபேசி பாவனையாளர்களிடம் இருந்து 200கோடி ரூபா ரெலிகொம் நிறுவனத்துக்கு செலுத்தப்பட வேண்டியுள்ளது என அறிவிக்கப்படுகிறது.

இதேவேளை தொலைபேசி பாவனைக்கான வருடாந்த கட்டணமும் அதிகரிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. [ஓ-14]

## ரண அறிவித்தல்கள்

### செல்வி பவானந்தராஜா சிந்துஜா

சரசாலை வடக்கைச் சேர்ந்த செல்வி ப. சிந்துஜா [சரசாலை ஸ்ரீ கணேச வித்தியாலய மாணவி] 18.4.95 இல் காலமானார். இவர் பவானந்தராஜா [சுவிஸ்] - ஜெயந்தி தம்பதிகளின் ஏகபுதல்வியும், சின்னப்பு - ஆச்சிப்பிள்ளை, வைத்திலிங்கம்-சிவக்கொழுந்து [மீசாலை] செல்லம்மா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், இரவீந்திரன் - ஜெயமதி [கனடா], பாலு - ஜெயஸ்ரீ [சுவிஸ்], கண்ணதாசன் [பிரான்ஸ்], விவேகானந்தன் [பிரான்ஸ்] ஆகியோரின் பெறாமகளும், ஜெயசீலன் - சியாமளா (ஜேர்மனி), விஜயா (நீதிமன்றப் - சாவகச்சேரி), நேசராணி ஆகியோரின் அன்பு மருமகளும், நிவேஜி, அனோஸ்கா, பிரசாந் ஆகியோரின் உடன் பிறவாச் சகோதரியும், சுரேகாவின் அன்பு மைத்துனியுமாவார். அன்னாரது ஈமக்கிரியைகள் இன்று மதியம் சரசாலையில் இடம்பெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

தகவல்:
க. சின்னப்பு [பேரன்]

சரசாலை வடக்கு. (36317)

### திருமதி பரிமளம் பிள்ளையினார்

தெல்லிப்பளையைச் சேர்ந்த முன்னாள் தலைமை ஆசிரியை திருமதி பரிமளம் பிள்ளையினார் 08-04 95 அன்று சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இளையதம்பி பொன்னம்மா ஆகியோரின் ஏகபுத்திரியும், காலஞ்சென்ற தலைமை ஆசிரியர் ஆறுப்பிள்ளை பிள்ளையினாரின் அன்பு மனைவியும், சிறீதரன் (மாகாண ஆணையாளர், மிருக வைத்தியசாலை கண்டி), சிறீரதி, சிறீமதி (தலைமைத்தாதி ஓமான்), சிறீசாந்தினி (ஆயுர்வேத வைத்தியர்), சிறீவதனி (சட்டத்தரணி, கொழும்பு), சிறீயலர் (மிருக வைத்தியர், கனடா), சிறீலதிகா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், குருசாமி இளைப்பாறிய T. A. நீர்ப்பாசன திணைக்களம்), வடிவேல் (தலைமைத்தாதி ஓமான்), செல்வராஜா (முன்னாள் நலன்புரி உத்தியோகத்தர், பாதுகாப்பு சார்ஜன்ட் கா. சி. தொ பாதுகாவலர், ச செ. சி.ச.), குமாரவேள் (உரிமையாளர், டொலர் அலுமினியம் இன்டஸ்ரீஸ், குஷிபா இன்டஸ்ரீஸ், கிங்ஸ்டன் சர்வதேச கல்லூரி, இலங்கை மின்தறி தொழிற்சாலை), சிவபாலன் (கனடா), சாந்தருபன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும், கர்ஷன் (பிரான்ஸ்), சுதர்ஷன் (பிரான்ஸ்), தர்சினி, சிந்துஜா (திருக்குடும்ப கன்னியர்மடம் யாழ்ப்பாணம்), அகிலன் (கிங்ஸ்டன் கல்லூரி), அருணன் (கிங்ஸ்டன் கல்லூரி), நிருபன் (பிரான்ஸ்), நிருஜன் (பிரான்ஸ்), ஸ்ரீபன் (பிரான்ஸ்), ஷமிலா (கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியாருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 09 - 04 - 95 இல் வவுனியாவில் நடைபெற்றன. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
செல்வராஜா
சிறீசாந்தினி செல்வராஜா

122, A V. றோட்,
அரியாலை,
யாழ்ப்பாணம். (36312)

### நரசிங்கம் ஆறுமுகம் B. A
(முன்னாள் D.O.A.S கல்முனை)

வேலணையை பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணத்தை வதிப்பிடமாகவும் கொண்ட நரசிங்கம் ஆறுமுகம் அவர்கள் நேற்றுக் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் நரசிங்கம், கமலாம்பிகை தம்பதிகளின் அன்புப் புதல்வனும், திருபதி தவமணி [இந்தியா], திருமதி சாரதாம்பாள், திருமதி லீலாவதி (இந்தியா, செல்வி அருளாவதி (R. D O கிளிநொச்சி), காலஞ்சென்ற இரகுநாதன் (R. D O வேலணை) ஆகியோரின் அன்புச் சகோதரனும், பொ. வீரகத்திப்பிள்ளை (வர்த்தகர் இந்தியா), பொ. கணபதிப்பிள்ளை (வர்த்தகர்), க. தவபாலசிங்கம் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மைத்துனரும், பகீரதன் (U K), சிரிதரன் (பிரான்ஸ்) சிறீதரன் (பிரான்ஸ்), காலஞ்சென்ற ராதா மற்றும் வாசுகி (இந்தியா), வள்ளிகாந்தன் (பிரான்ஸ்) உதயணன் (இந்தியா), உதயசேனன் (இந்தியா), செல்வசேந்தன் (இந்தியா) ஆகியோரின் பாசமிகு மாமனாருமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (19 - 4 -95) மாலை 3.00 மணியளவில் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்
செ. நடேசபிள்ளை
(ஒன்றுவிட்ட சகோதரன்)

36, 3ம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம் (36314)

## ரண அறிவித்தல்கள்

### முருகேசு சுகந்தசீலன்
[சமுத்ரா றேட்ஸ் - யாழ்ப்பாணம்]

நவாலி தெற்கைச் சேர்ந்த முருகேசு சுகந்தசீலன் 17 - 04 - 95 அன்று கொழும்பில் காலமானார் அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று மாலை 4 மணிக்கு மாதம்பிட்டி சேமக்காலையில் நடைபெறும். அன்னாரின் ஆத்ம சாந்திக்காக அஞ்சலிக் கூட்டமொன்று இன்று காலை 9 மணிக்கு சின்னப்பா வீதி, நவாலியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெறும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
செ தவம்

[36313]

### திருமதி பாலசிங்கம் சிவபாக்கியம்

வேலணை வங்களாவடியைப் பிறப்பிடமாகவும், 50/45, ஆஸ்பத்திரி வீதி, கொட்டடி யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகக் கொண்டவருமாகிய திருமதி பாலசிங்கம் சிவபாக்கியம் அவர்கள் நேற்று இறைபதம் அடைந்துவிட்டார்

இவர் காலஞ்சென்ற குமாரசாமி பாலசிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், திருமதி சோ. கமலாவதி [கொழும்பு], லிங்கநாதன் [வசந்தா பார்மசி, யாழ்ப்பாணம்], மகேந்திரன் [பிரான்ஸ்], சுந்தரம் [சாளினி அணிகல மாடம், யாழ்ப்பாணம்], திருமதி நாகேஸ்வரன் சந்திராவதி [பிரான்ஸ்] ஆகியோரின் அன்புத் தாயாரும், சோமசுந்தரம் [கொழும்பு], திருமதி லி வசந்தாதேவி, திருமதி ம. தர்மராணி [பிரான்ஸ்], திருமதி சு மைதிலி, நாகேஸ்வரன் [பிரான்ஸ்] ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று [19-4-95] புதன்கிழமை பிற்பகல் 2 00 மணியளவில் 50/45, ஆஸ்பத்திரி வீதி, கொட்டடி, யாழ்ப்பாணத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

தகவல்:
பா. லிங்கநாதன் (மகன்)
[யாழ். ஆங்கில மருந்து வணிகர் மன்றத்தலைவர்]

50/45, ஆஸ்பத்திரி வீதி,
கொட்டடி,
யாழ்ப்பாணம். (36316)

## திருநெல்வேலி அரசடி
## ஸ்ரீ சிவகாமசுந்தரி அம்பாள் ஆலயம்
## பூங்காவனம் இன்று (19-4-95)

நண்பகல் 12.00 மணிக்கு மகேஸ்வர பூசையும்
மாலை 6 30 மணிக்கு சமய அறிவுப் போட்டிக்கான பரிசளிப்பு விழாவும்
மாலை 7 00 மணிக்கு திருக்கல்யாணமும் நடைபெறும்.

### நிகழ்ச்சி நிரல்

ஈழத்தின் பிரபல தவில், நாதஸ்வர கலைஞர்களான

| | |
|---|---|
| ஈழநல்லூர் பெருமாள் குழுவினர் | K.R. புண்ணியமூர்த்தி |
| ஈழநல்லூர் கணேசன் குழுவினர் | T. உதயசங்கர் |
| N.K பத்மநாதன் குழுவினர் | p. முருகதாஸ் |
| K R. சுந்தரமூர்த்தி குழுவினர் | N.R.S. ரவீந்திரன் |
| S.S. சிதம்பரநாதன் குழுவினர் | N.R.S. சுதாகர் |
| M.P. நாகேந்திரன் குழுவினர் | S. ராமதாஸ் |
| R கேதீஸ்வரன் குழுவினர் | |

★ கலாவினோதன் N கணபதிப்பிள்ளை (சின்னமணி) அவர்களின் வில்லிசை

★ இசைக்கச்சேரி

| | |
|---|---|
| இசைக்கலைமணி – வர்ணராமேஸ்வரன் | பாட்டு |
| இசைக்கலாவித்தகர் – சு. கோபிதாஸ் | வயலின் |
| இசைக்கலாவித்தகர் – க. கண்ணதாசன் | மிருதங்கம் |
| செல்வன் க. மயூரன் | தபேலா |
| திரு. வி. கேதீஸ்வரன் | முகர்சிங் |

★ அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம் ★

ஒலி: கண்ணா சவுண்ட் திருநெல்வேலி
ஒளி: மனோ லைட்ஸ் கோப்பாய்

— அம்பாள் அடியார்கள்

[36318]

## BITSMANS கல்வி நிறுவனம் மானிப்பாய்

**A/L 97** கலை, வர்த்தகம் கணித, விஞ்ஞான வகுப்புக்கள்

| | | |
|---|---|---|
| பொருளியல் | — | உதயன், மகேந்திரன் |
| வர்த்தகம் | — | பிரபல ஆசிரியர் |
| அளவையியல் | — | SS மனோகரன் |
| கணக்கியல் | — | என். ராஜன் |
| இந்துசமயம் | — | என். பாலா |
| தமிழ், இந்து நாகரிகம் | — | என் பாலா |
| நாடகமும் அரங்கியலும் | — | ஸ்கந்தவேள் |
| கிறிஸ்தவம் | — | டினேஸ் |
| புவியியல் | — | சண் |
| பௌதிகம் | — | ஜெயசீலன் |
| இரசாயனம் | — | மணியம் சிறிதரன் |
| தூய பிரயோக கணிதம் | — | கிருஷ்ணா குணம் |
| விலங்கியல் | — | ஞானேந்திரன் |
| தாவரவியல் | — | பாலா |

ஆரம்பம்: 21·04·1995 வெள்ளி மாலை 3-00 மணி

(விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன )

[சி-1036]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org